விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 18 செவ்வாய்க்கிழமை (02.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

## தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி

# ஐ.நா முன்றலில் மாபெரும் கவனயீர்ப்பு

### ஈழத் தமிழர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு



*(ஜெனிவா)* தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும் ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அலுவலகம் முன்பு தமிழர்கள் ஒன்றுதிரண்டு நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## வவுனியாவில் வைத்திய தம்பதிகள் மீது வீடு புகுந்து தாக்குதல்

(வவுனியா)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வைத்திய தம்பதிகளின் வீட்டுக்குள் 19

## கொரோனா 5 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் ஐவர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளதை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 19

### இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தக் கோரி

## நல்லூரில் 2ஆவது நாளாக உணவு தவிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையை சர்வதேச குற்றவியல நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் ஆரம்பித்த 19

### முள்ளியவளை முறிப்பில்

## குளவி தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை முறிப்பு பகுதியில் விவசாயி ஒருவர் குளவி தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கருநாட்டுக்கேணியினை பிறப்பிடமாகவும் குமாரபுரம் முள்ளியவளையை 19

### மனநிலை பாதிக்கப்பட்ட

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு

### சிறுப்பிட்டி தெற்கில் சம்பவம்

(கரணவாய்)

மனநிலை பாதிக்கப்பட்ட மகனால் தாக்கப்பட்டு தந்தை உயிரிழந்த 19

## ஜெனிவா வரையில் தமிழர்களின் அடிப்படை கோரிக்கைகள்கூட பூர்த்தி செய்யப்படவில்லை

### சர்வதேச நாடுகளுக்கு தமிழ் சிவில் சமூகம் கடிதம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் பிரித்தானியா, அமெரிக்கா உட்பட்ட நாடுகளைக் கொண்ட குழுமத்தினால் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்ற முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச வரைபு தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் அடிப்படையான கோரிக்கைகளைகூட பூர்த்தி செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டி தமிழ் சிவில் சமூக அமையத்தினால் அந்த நாடுகளுக்கு நேற்று கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்தில் இனப்படுகொலை உட் 19

### சர்வதேச நீதிமன்றில் இலங்கையை

## பாரப்படுத்தக்கோரி யாழ்., கிளிநொச்சியில் உறவுகள் கவனயீர்ப்பு




3ஆம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறையில் விடுதலையான சிறைக் கைதிகள் மூவர் உட்பட

## 16 பேருக்கு வடக்கில் கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேலும 16 பேருக்கு கொரோனா தொற்றுஉள்ளமை நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ 19

## படிக்கட்டில் தவறிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

### கிளிநொச்சி கந்தபுரத்தில் சம்பவம்

(தருமபுரம்)

கிளிநொச்சி - கந்தபுரம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் படிக் கட்டிலிருந்து தவறிவிழுந்து உயிரிழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தபுரம் பொதுச்சந்தையின் பின்புற வீதியில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றில் அலுமினிய பொருத்து 19

## சிறீதரனிடம் பொலிஸார் வாக்குமூலம்

(முறிகண்டி)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் 19

### நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து

## தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடாது

(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்துச் சபை பேருந்துகள் நெடுந்தூர பேருந்து நிலையத்தில் சேவையில் ஈடுபடாது என வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார். 19

# மரண அறிவித்தல்



## இராசம்மா இராசையா

உத்திராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராசம்மா இராசையா நேற்று (01.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - சின்னாச்சி தம்பதியரின் செல்வப் புதல்வியும் நாகன் இராசையா அவர்களின் அன்பு மனைவியும் கனகம்மா, காலஞ்சென்ற இரத்தினம், செல்லையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெயந்தி, ஜெயராசா (சுவிஸ்), ஜெயலலிதா, ஜெயபாலன் (பிரான்ஸ்), சித்திரா, ஜெயசுதன் (லண்டன்), ஜெயமாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தராசா, சுமதி (சுவிஸ்), மன்மதராசா, சந்திரகுமார், ஜெயலட்சுமி (பிரான்ஸ்), சதானந்தினி (லண்டன்), ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுவைதா, மிதுனன் (பிரான்ஸ்), மிதுஷன், மதுஷன், அனோஜன், பிரவீனா, சிந்துஜன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), கஜானி (பிரான்ஸ்), நூதனி (பிரான்ஸ்), பிரியங்கன், அருண்ஜா, பிரகஸ்ஜன், கருணி, மகிஷாந், காருஜன், சுவிசாந், இபிஷன் (லண்டன்), அபிஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருத்திஷ் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுகிக் கிரியைகள் இன்று (02:03.2021) செவ்வாய்க் கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(C-1570)

உத்திரவத்தை, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.

077 025 7498
077 661 7022

தகவல்:- குடும்பத்தினர்

## வடமராட்சி கிழக்கில்
# காணாமல்போன மீனவர்கள் இருவரும் பத்திரமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் மீட்கப்பட்டு கரை சேர்க்கப் பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு வத்திராயனைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் அவர்களின் தொடர்பு அறுந்துபோன நிலையில் அவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மீனவர்கள் கடற்பரப்பில் வெவ்வேறு திசைகளில் தேடிப் புறப்பட்டனர். அவ்வாறு புறப்பட்ட மீனவர்களில் காணமல் போனவர்களில் ஒருவரான கே.கணேசலிங்கம் என்பவரின் மகனும் படகில் தேடிப் புறப் பட்டுள்ளனர்.

இதன் போது, கிளிநொச்சி மாவட்டம் சுண்டிக்குளம் கடற்பரப்பில் இயந்திரம் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட படகிலிருந்த இருவரும் மீட்கப்பட்டதுடன், படகும் கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ள தாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-03,60)

## NORTHERN DOCTORS FORUM
### NOTICE OF ANNUAL GENERAL MEETING

To the members of the NORTHERN DOCTORS FORUM,

Notice is hereby given that annual general meeting of NORTHERN DOCTORS FORUM will be held at the NTS hall, Teaching hospital, Jaffna at 2 pm on 20.03.2021 for the following purposes.

1.To receive and adopt the report of the committee and the audited accounts for the year 2019/2020
2.To elect officer bearers for 2020 / 2021
3.To appoint an auditor.
4.To consider any other business of which notice has given.
Further details www.ndfsl.org
By order of the committee of management

Secretary,

(5981)

# மணிவிழா வாழ்த்து

## திரு. ஆறுமுகம் குமரேசமூர்த்தி

B.A, M.A, M.Phil.Q, M.Ed, M.Phil, Spl. Sc. Trd, SLPS 1, P.G. Dip. In. Ed (Merit), P.G. Dip. in. Ed. M.gt (Merit), ALIC (Sinhala), ALIC (English), Dip. in. TI (Sinhala - Tamil ), H.Dip. in Tl (Sinhala - Tamil - English )
( கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலகம், காரைநகர். )



எமது பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலை வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டவரும் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை ஓய்வுபெறும் திரு. ஆறுமுகம் குமரேசமூர்த்தி அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சிறப்புடன் வாழ வியாவில் ஐயனாரை வேண்டி நிற்கின்றோம்.

### சேவை விபரம்

ஆசிரியர் - ப/ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம் - ஹப்புத்தளை
05.08.1985 - 31.12.1987

பயிற்சி ஆசிரியர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - யாழ்ப்பாணம்
01.01.1988 - 31.12.1989

ஆசிரியர் - க / நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி - நாவலப்பிட்டி (தேசிய பாடசாலை)
01.01.1990 - 31.12.1991

ஆசிரியர் - யா / யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம் (தேசிய பாடசாலை )
01.01.1992 - 26.12.1998

அதிபர் - யா/வியாவில் சைவ வித்தியாலயம் - காரைநகர்
27.12.1998 - 02.05.2008

அதிபர் - யா/ காரைநகர் இந்துக் கல்லூரி - காரைநகர் ( தேசிய பாடசாலை )
03.05.2008 - 06.07.2015

அதிபர் - யா / சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயம் - மானிப்பாய்
07.07.2015 - 17.01.2016

கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலகம் - காரைநகர்
18.01.2016 - 01.03.2021

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்,
வியாவில் சைவ வித்தியாசாலை, காரைநகர்.


(C-1556)

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தக்கோரி
# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு பேரணி





யாழ்ப்பாணம்




கிளிநொச்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் கவனயீர்ப்புப் பேரணிகள் இடம்பெற்றன.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த பேரணியானது யாழ்ப்பாணத்தில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வரையும் கிளிநொச்சியில் கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகி பழைய கச்சேரி வரையும் நடைபெற்றன.

இறுதியில் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தினூடாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு கையளிப்பதற்கான அறிக்கை ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (நி-33-100)

# வர்த்தமானி வெளியீட்டின் பின்னும் காலம் கடத்துவது முறையா?

## சடலங்களை அடக்கம் செய்வது குறித்து மரிக்கார் கேள்வி

(கொழும்பு)

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள போதிலும் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை காலம் தாழ்த்தி மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கிப்படுகிறதா? என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரும் இரு மாதங்களாக கட்டாய தகனம் செய்யப்பட்டமைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

எனவே இந்த தீர்மானம் மேலும் காலம் தாழ்த்தப்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடல விவகாரத்தில் பல வேறுபட்ட கருத்து முரண்பாடுகளின் பின்னர் சுகாதார அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியானதன் பின்னர் தற்போது சடலங்களை அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொவிட் சடலங்கள் தொடர்பில் ஆராயும் நிபுணர்கள் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரு மாதங்கள் நிறைவடைந்துள்ளன.

இவ்வாறிருக்கையில் இந்த தீர்மானத்தை மேலும் காலம் தாழ்த்துவதன் மூலம் இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிக்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பினார். (நி-4)

# ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவே தலைமை ஏற்கவேண்டும்

(கொழும்பு)

தமிழர்களின் அரசியல் தலைவிதி தமிழர்களின் கைகளில் என்றதன் அடிப்படையில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பைக் கோருவதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வீ.உருத்தியகுமார் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் தொடர்பாகக் கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களில் தலைமைத்துவம் ஏற்க வேண்டிய ஒரு தார்மீகப் பொறுப்பும் தார்மீகத் தகுதியும் இந்தியாவிற்குத்தான் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## தவறவிடப்பட்டுள்ளது

கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட இ.குணசீலன் என்பவருடைய மோட்டார் வாகன வரிப் பத்திரம் மற்றும் காணி உறுதிப் பத்திரங்கள் அடங்கிய செம்மஞ்சள் கைப்பை ஒன்று 27.02.2021 அன்று கைதடிக்கும் நாவற்குழிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 317/10, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.

077 666 5820

(5972)

## முதலாம் ஆண்டு நினைவு

## ஏகாம்பரம் பவானி (ரதி)



அம்மாவின் அன்பு
தெய்வங்களையே தோற்கடிக்கும்
கடவுள் கொடுத்த வரமல்ல அம்மா
அம்மா தான் கடவுள்
கருணையும் தாயும் கடவுளும் ஒன்று
எம் நெஞ்சமெல்லாம் உன் திருவுருவம்
எப்பொழுதும் வீற்றிருக்கும்
நாள் எல்லாம் உன் நினைவன்றி
வேறில்லை எம் மனதில்
பாசமிக்க கருணை முகமே
பனி வரும் எக்கனமும்
அமுதமாய் நீ அழைக்கும்
அன்பு மொழி கேட்பதற்காய்
காத்திருக்கும் ஏக்கமதை
விபரிக்க வார்த்தையில்லை
வார்த்தைகளை நாமிழந்து
மாதங்கள் ஆறிரண்டு
அன்போடு தைரியத்தை ஊட்டிய எம் அம்மா
வாழ்க்கை எது தரினும் எதிர்கொள்ளும்
தைரியத்தை நீ தந்தாய் அம்மா.


பிறப்பு:-1934.04.17 இறப்பு:-2020.03.02

(C-1544)

மண்டைதீவு - 05

குடும்பத்தினர்.

# மீண்டும் களமிறங்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் ஜாம்பவான்கள்




வீதி பாதுகாப்பு இரு பது-20 உலகக் கிரிக் கெட் தொடர் எதிர் வரும் 05 ஆம் திகதி இந்தியா வின் ராய்ப்பூரில் ஆரம் பமாகி 21ஆம் திகதியுடன் நிறை வடைய வுள்ளது.

இதில் முன்னாள் கிரி க்கெட் ஜாம்பவான்களான சச்சின் டெண்டுல்கர், வீரேந்தர் சேவாக், பிரையன் லாரா, முத்தையா முரளிதரன், சனத் ஜயசூரிய ஆகியோர் மீண்டும் களத்தில் இற ங்கவுள்ளனர்.

கொவிட் -19 தொற்று நோய் காரணமாக கடந்த 2020 மார்ச் 11 அன்று நான்கு ஆட்டங்களுக்குப் பிறகு இந்தத் தொடரின் முதல் பதிப்பு நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இரண்டாம் பதிப்பு தற்சமயம் ராய்ப்பூரில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட ஷாஹீத் வீர நாராயண் சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள் ளது.

மைதானத்தில் 65,000 பேர் அமர்ந்து போட்டியை ரசிக்கலாம். இருப்பினும், கொவிட் -19 தொற்று நோயால் ரசிகர்க ளின் எண்ணிக்கை 50 சதவீத மாக குறைக்கப் பட்டுள்ளது.

கடுமையான கொவிட் கட்டுப்பாடுகள் காரண மாக அவுஸ்திரேலிய லெஜண்ட்ஸ் அணி இத் தொடரிலிருந்து துரதிர்ஷ்டவசமாக விலகியுள் ளது. அதேநேரம் இங்கிலாந்து மற்றும் பங்களா தேஷ் ஆகிய நாடு களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு புதிய அணிகள் தொடரில் இணைத்துக் கொள்ளப்பட வுள்ளன.


வீதி பாதுகாப்பு உலக கிரிக கெட் தொடர் என்பது மகாராஷ் டிராவின் வீதி பாதுகாப்பு துறை முன்னெடுத்துள்ள முன் முயற்சியாகும், இது தொழில் முறை மேலாண்மை குழு உடன் இணைந்து தொடரின் ஆணையாளராக இருக்கும் சுனில் கவாஸ்கர் மற்றும் பிராண்ட் தூதராக இருக்கும் டெண்டுல் கர் ஆகியோரால் முன்னெடுக் கப்படுகிறது. (4)

# ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசையில்
## ரோகித் 8 வது இடத்திற்கு முன்னேற்றம்

இந்திய அணியின் அதிரடி பட்ஸ்மன் ரோகித் சர்மா டெஸ்ட் தரவரிசையில் முதன் முறை யாக 8ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதி ரான 3ஆவது டெஸ்ட்போட்டியில் முதல் இன்னிங்சில் 66 ரன்க ளும், 2ஆவது இன்னிங்சில் ஆட்டமிழக்காமல் 25 ரன்களும் விளாசினார். இதனால் ஐ.சி.சி டெஸ்ட் பட்ஸ்மன் தர வரிசையில் 20 புள்ளிகள் பெற்று 742 புள்ளி களுடன் 8 ஆவது இடத்தை பிடித்துள் ளார். ஐ.சி.சி. டெஸ்ட் பட்ஸ்மன் தரவரிசையில் இது அவரின் அதிகபட்ச புள்ளி ஆகும். (4)

# நீச்சல் பயிற்சிகள்





விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட விளையாட்டுப்பிரிவின் ஒழுங்குபடுத்தலில் 14 வயதிற்கு மேற்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வீர, வீராங்கனை களுக்கான நீச்சல் பயிற்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு நாட்கள் கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது. மாவட்டத்தின் திறமையான வீரர்களை இனம் காணும் வகையில் இடம்பெற்ற குறித்த பயிற்சியில் மாவட்டத்தின் பெருமளவான வீரர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (படங்கள்-தவசீலன்)


## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2019/2020 (வெளிவாரி)
## Bachelor of Business Management Degree Programme - 2019/2020 (External)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை 2018அல்லது அதற்கு முன்னர் எப்பாட்ப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

❖ ஏதாவது ஒரு பிரிவில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் பூர்த்தி செய்தவர்கள்

**அல்லது**

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல் :**

பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு :**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப்பரீட்சை அல்லது இரண்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 050112150001412 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டினை யாழ். பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அல்லது**

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

**விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2019/2020" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பமுடிவுத்திகதி : 31.03.2021 (புதன்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

மேலதிக விபரங்களுக்கு: 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
01.03.2021 (C-1106)

## விவசாய அமைச்சிற்கான புதிய செயலாளர் நியமனம்




(கொழும்பு)

விவசாய அமைச்சின் புதிய செயலாளராக எம்.பி.ஆர்.புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

## 7 ஆம் திகதி 'கறுப்பு ஞாயிறு'




(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது என தெரிவித்து கறுப்பு ஞாயிறு தினத்தை அறிவிக்க கொழும்பு மறைமாவட்ட பேராயர்கள் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் கறுப்பு ஞாயிறு தினமாக அறிவிக்க கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயர்கள் தீர்மானித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில்கறுப்பு ஞாயிறு தினம் பிரகடனப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அன்றைய தினம் கிறிஸ்தவ மக்கள் கறுப்பு ஆடைகளை அணிந்து பூஜையில் கலந்துகொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


# அறிவித்தல்

**(Un Sec.16 of CPC)**

மிருசுவில் கெற்பேலி கிழக்கு திரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தாவும், பூசகரும், கொடிகாமம், கச்சாய் தெற்கை வதிவிடமாகக் கொண்டவருமான இளையதம்பி நடராஜா-மனுதாரரினால் நம்பிக்கைச் சொத்து சட்டத்தின் பிரிவு 112 இன் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் வழக்கு இலக்கம் நம்பிக்கை சொத்து /32/2019 கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற் சொல்லப்பட்ட மனுதாரரின் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் ஆதன இடாப்புகளில் விபரிக்கப்படும் திரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கும் நம்பிக்கை ஆதனங்களை **(Trust Properties)** குறித்த ஆலய தர்மகர்த்தாவும் பூசகருமான மனுதாரரிடம் ஒப்படைக்கும் கட்டளையையும் **(Vesting Order)** அத்துடன் நீதிமன்றம் நியாயமெனக் கருதும் நிவாரணங்களையும் வேண்டியுள்ளார்.

மனுதாரரின் மனுவில் (விண்ணப்பத்தில்) மனுதாரரால் வேண்டப்பட்ட நிவாரணங்கள் (ஒப்படைக்கும் கட்டளை உள்ளடங்கலாக) தொடரில் எவராயினும் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் இவ்வறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியோ அல்லது எழுத்து மூலமாக ஆட்சேபனையை கௌரவ (சாவகச்சேரி) மாவட்ட நீதிமன்றத்தில் கோவைப்படுத்தப்பட வேண்டும்.

**ஆதனடாப்பு 1**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி, கச்சாய்க் கோவிற்பற்று, விடத்தல்பளை இறை தற்போது கெற்பேலி இறை **"வீரவாகு தேவன் கற்குளி"** நிலப்பரப்பு 19 உம் "உயிலடி" நிலப்பரப்பு 114 குளி 10 இவற்றில் தெற்குப் பக்கமாக நிலபர 66 குளி 14ம் பயிர் வகைகளும் இந்த நிலபர 66 குளி 14 இற்கும் எல்லைகள் கிழக்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனம் வடக்கு: பொன்னுத்துரை கனகலிங்கத்தினால் ஆட்சி செய்யப்படும். ஆதனம் மேற்கு: முடிக்குரிய ஆதனம் தெற்கு: இவ் ஆலயத்துக்குரிய ஆதனம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 2**

மேற்படி இறை **"வீரவாகு தேவன் கற்குளி உயிலடி"** நிலபரப்பு 60ம் பயிர்வகைகளும். இந்த நிலபர 60 இற்கும் எல்லைகள் கிழக்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனம் வடக்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனம் மேற்கு: முடிக்குரிய ஆதனம் தெற்கு: கடற்தெரு. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 3**

மேற்படி இறை **"நல்லவாகு தோப்பும் மறுபிரிவுகளும்"** நிலப்பரப்பு 149 குளி 4 1/2 இதில் வடக்குப் பக்கமாக குடியிருப்புக் காணியில் நடுப்பெற நிலபர 12ம் பயிர்வகைகளும். இந்த நிலபர 12 இற்கும் எல்லைகள் கிழக்கு: புலேந்திரன் பெண் அன்னபூரணிக்குரிய ஆதனம் வடக்கு: பாக்கியநாதன் பெண் அழகம்மாவுக்குரிய ஆதனம் மேற்கு: ஒழுங்கை தெற்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 4**

மேற்படி இறை **"நல்லவாகு தோப்பும் மறுபிரிவுகளும்"** நிலபரப்பு 149 குளி 4 1/2 இதில் தெற்குப் பக்கமாக நிலபர 96ம் ஆலயமும் பயிர்வகைகளும். இந்த நிரபர 96 இற்கும் எல்லைகள் கிழக்கு: இக்கோவில் ஆதனம் வடக்கு: இக்கோவில் ஆதனம் மேற்கு: கோவில் ஆதனங்கள் தெற்கு: கடற்தெரு. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 5**

மேற்படி இறை **"ஆண்டிச்சுடலையும் வீரவாகு தேவன் கற்குழி உயிலடி"** நிலபரப்பு 150 குளி இதில் தெற்குப் பக்கமாக நிலபர 100ம் ஆலயமும் பயிர்வகைகளும். இந்த நிலபர 100 இற்கும் எல்லைகள் கிழக்கு: ஒழுங்கை வடக்கு: பாக்கியநாதன் பெண் அழகம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் மேற்கு: இக்கோவில் ஆதனம் தெற்கு: கடற்தெரு. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 6**

மேற்படி இறை **"வீரவாகு தேவன் உயிலடி"** நிலபரப்பு 120ம் பயிர்வகைகளும். இந்த நிலபர 120 இற்கும் எல்லைகள் கிழக்கு: ஆலயத்திற்குரிய ஆதனம் வடக்கு: ஆலயத்துக்கும் இளையதம்பி றங்கநாதனுக்குமுரிய ஆதனம் மேற்கு: பொன்னையா சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம் தெற்கு: கடற்தெரு. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 7**

மேற்படி இறை **"வீரவாகு தேவன் உயிலடி"** நிலபரப்பு 65ம் பயிர்வகைகளும். இந்த நிலபர 65 இற்கும் எல்லைகள் கிழக்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனமும் நாகராசா பெண் சந்திரலீலாவுக்குமுரிய ஆதனமும் வடக்கு: வேலாயுதம் செல்வரஞ்சனுக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு: சிதம்பரப்பிள்ளை செல்வகுமாருக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு: வேலுப்பிள்ளை தியாகராசாவின் ஆதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

**ஆதனடாப்பு 8**

மேற்படி இறை **"வீரவாகு தேவன் உயிலடி"** நிலபரப்பு 66 குளி 10ம் பயிர்வகைகளும். இந்த நிலபர 66 குளி 10 இற்கும் எல்லைகள் கிழக்கு: இவ் ஆலயத்திற்குரிய ஆதனம் வடக்கு: பொன்னுத்துரை கனகசிங்கத்துக்குரிய ஆதனம் மேற்கு: இளையதம்பி றங்கநாதனுக்குரிய ஆதனம் தெற்கு: இவ் ஆலயத்துக்குரிய ஆதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

(5973)

**மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணி** **02.03.2021**



# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(எழுத்தாளர், கவிஞர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - கல்வித் திணைக்களம்)



தோற்றம்:- 08.11.1947

மறைவு:- 12.03.2012

**அன்பின் இருப்பிடமாய்**
**வாழ்க்கையின் வழிகாட்டியாய்**
**இலக்கியத்தை போதித்த ஆசானாய்**
**இருந்து எம்மை வளர்த்த அப்பாவே**
**நீங்கள் மறைந்து ஒன்பது ஆண்டுகள்**
**ஆகிவிட்டபோதும் உங்கள் அறிவுரைகள்**
**காதிலே கேட்கிறது.**

(5971)

கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 02 |
| 11 | 02 |
| 1937 | 2021 |



## அமரர். சண்முகம் பாலசிங்கம்

(குழுமுனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதான பூசகர்)

கடந்த 02.02.2021 அன்று அம்மன் திருவடிப் பேறு பெற்ற எமது அன்பு ஐயாவின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 02.03.2021 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். 04.03.2021 வியாழக்கிழமை அன்று முழங்காவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தோடு அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்தோர்க்கும், உடனிருந்து உதவிகள் பல செய்தோர்க்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தந்தோர்க்கும், அனைத்து வழிகளிலும் ஆறுதல் கூறி அரவணைத்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எம் குடும்பத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(5971)

நாவலர் வீதி,
முழங்காவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 706 6422, 074 197 0284

# நெடுந்தூர பேருந்து நிலையத்தை தவிர்த்தால் சாரதிகளுக்கு பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் அதிரடி

**(நல்லூர்)**

**யாழ்ப்பாணம் - நெடுந்தூர பேருந்து நிலையத்தை தவிர்த்து தூர சேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்து சாரதிகளுக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் எச்சரித்துள்ளார்.**



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்தில் நேற்று காலையில் இருந்து தனியார் துறையினர் சேவையில் ஈடுபட்டு வரும் நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து சேவையினர் குறித்த பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடுவதை புறக்கணித்துள்ளனர்.

இந்தநிலையில் இலங்கைப் போக்குவரத்து சபையின் மத்திய பேருந்து நிலையத்திற்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் விஜயம் மேற்கொண்ட யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணி வண்ணன் இலங்கை போக்குவரத்து சபை சாரதிகள், நடத்துநர்களுக்கு குறித்த விடயத்தினை தெளிவுபடுத்தி, இன்றிலிருந்து(நேற்று) நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்தே வெளி மாவட்டத்திற்கான சேவைகள்இடம்பெறும்எனவும், இதைத் தவிர்த்து யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும் பேருந்து நடத்துநர் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிததுள்ளார்.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபை பணியாளர்கள் கருத் துத் தெரிவிக்கையில்,

தமது உயர் மட்டத்திலிருந்து தமக்கு எந்தவித அறிவித்தலும் வழுங்கப்படவில்லை எனவும் குறித்த விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாணத்துக்கு பொறுப்பான அதிகாரி அல்லது சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தனர் .

அதற்கு பதிலளித்த யாழ் மாநகர முதல்வர், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நெடுந்தூர பேருந்து நிலையம் தொடர்பில் பல்வேறுபட்ட கூட்டங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளை அழைத்தபோதும் அவர்கள் சமுகமளிக்க வில்லை எனவும், தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டும் அவர்கள் பதிலளிக்கவில்லை.

எனவே இனியும் தாமதிக்க முடியாது. இன்றிலிருந்து (நேற்று) நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து தான் குறித்த சேவைகள் இடம்பெற வேண்டும்.அதனை மீறும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (5-33)

# சுமார் 30 வருடங்களின் பின் துப்புரவு செய்யப்படும் யாழ்.நகர பிரதான வெள்ளவாய்க்கால்

(நல்லூர்)

யாழ்ப்பாண நகரின் பிரதான வெள்ளவாய்க்கால் சுமார் 30 வருடங்களின் பின்னர் யாழ்.மாநகர சபையினரால் தற்போது துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் துப்புரவு செய்யப்படாத குறித்த பிரதான வாய்க்கால் நேற்று முன்தினம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் நெறிப்படுத்தலில் யாழ். மாநகர சபையின் சுகாதார பணியாளர்களால் துப்புரவு பணிகள்நடைபெறுகின்றன.



யாழ்.நகரின் ஸ்டான்லி வீதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வரை செல்லும் இரண்டு கிலோ மீற்றர் நீளமுடைய குறித்த பிரதான வாய்க்கால் யாழ். நகரின் மத்தியில் கடைகள் வீதியின் கீழாக செல்கின்றது.

இத் துப்புரவு பணி மிக கடினமானதாகவும் ஆபத்தானதாகவும் இருப்பதனால் மாநகர சபையின் நோயாளர் காவு வண்டியும் குறித்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட துப்புரவு பணி இன்னு சில நாட்களுக்கு தொடரும் என எதிர்பார்ப்பதாக மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார்.(5-4-33-18)

## ஆன்மிக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்த சொற்பொழிவு எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சிவநெறிச்செம்மல் சைவப் புலவர் பொன் சுந்திரவேல் **ஆற்றுப்படைதந்த நக்கீரர்** என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற் பொழிவாற்றுவார். (5)




# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் 2021ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நிலையத்தின் புதிய தலைவராக சீ. கங்காதரனும் செயலாளராக சி. ஜனகனும் பொருளாளராக நா. சிவதர்சனும் உப தலைவராக சி.ஜி. திருமாலழகனும் உபசெயலாளராக இ. கருணாகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கிறிஸ்ரின் சாந்தவதனி அப்துல் ஜபார் கலந்து கொண்டார்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக செ. யோகராசா, செ. பரம்நாத், அ. ஆலசுந்தரம், ஆ. இராகுலன், ம. பிரதாபன், அ. ஜூட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் களாக ம.மணி கலாதனும் டி. எம். கற்பநாயகமும் கணக்காய்வாளராக ம. நிரோஷனும் தெரிவு செய்யப்பட்டனர். (5-4-60)



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications from suitably qualified persons for the following posts:

## 1. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION)

**Qualifications:**

An Attorney-at-Law with A Degree in Law/ Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualification.

**OR**

An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualification.

**Salary Scale** : U-EX 1(II)- Rs. 50,625-3X1,125-54,000 (EB) 55,335; 12X1,335-71,355/- p.m.

**Selection** : By Structured Interview

## 2. CURATOR (LANDSCAPE)- GRADE III

**Qualifications:**

Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/ Horticulture/Floriculture/Forestry from a recognized University/HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed private sector organization in supervisory capacity.

**OR**

Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Landscape Architecture from a recognized University/HEI with not less than one (01) year of experience in Landscaping in a State/ Corporation or reputed private sector organization in supervisory capacity.

**OR**

Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Botany of a recognized University/HEI with not less than two(02) years of experience in landscaping in State/Corporation or reputed private sector organization in supervisory capacity.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 50,625-3X1,125-54,000(EB) 55,335; 12X1,335-71,355/- p.m.

**Selection** : By Structured Interview

## 3. CHIEF SECURITY OFFICER- GRADE II

**Qualifications:**

An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an Officer of equivalent rank in the other Armed Services.

**OR**

A Person who possesses a degree from a recognized University/Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

**OR**

A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**Salary Scale** : U-EX 1(II)- Rs. 50,625-3X1,125-54,000(EB) 55,335; 12X1,335-71,355/- p.m.

**Selection** : By Structured Interview

## 4. PROJECT MANAGER – CONSTRUCTION WORKS

**Qualifications**

(a)Should posses a B.Sc Engineering degree from a recognized University/ HEI specializing in Civil Engineering

**or**

Should posses a B.Sc Engineering degree from a recognized University/HEI specializing in Quantity Surveying

**or**

Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka (IESL)

**AND**

(b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.

**or**

Posses a corporate membership from a recognized Institute of Quantity Surveying

**AND**

(b)A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well as managing direct labour.

**Salary Scale :** U-EX2(II)- Rs.66,180-8X1,335;8X1,630-89,900/-p.m.

**Selection** : By Structured Interview.

## 5. CHIEF MARSHAL

**Qualifications :**

1. A holder of the post of Deputy Chief Marshal in the Marshal service in the University system and confirmed in that post with not less than five (05) years of satisfactory service in that grade.

**Physique** –
Height - 5' 5"
Chest - 32" deflated

**Note** : Preference will be given to those with actively participated in sports activities, social welfare activities and recreation programmes within the University and at national level.

**OR**

2. An Officer not below the rank of Lieutenant Colonel in Sri Lanka Armed Forces/equivalent rank in Sri Lanka Police with active participation in sports activities.

**Salary Scale**: U-EX 2(II) - Rs.66,180-8X1,335;8X1,630-89,900/-p.m.


**Selection**: By Structured Interview

## STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number**: **970000090000387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.




**Sample Deposit Slip is given below:**

**All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post which you are applied for on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of **the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna** on or before **26.03.2021.**


Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR,
University of Jaffna.

(C-1563)

# பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கூட்டமைப்பில் இணையவேண்டும்



(குருமன்காடு)

கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுக்கிறது என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழ விடு தலை இயக்கத்தின் வவுனியா அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் கட்சிகள் எல்லோரும் ஒருமித்த கொள்கையின் கீழ் செயற்படக்கூடிய வடிவமைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொள்ள வேண்டும். அதை செய்வதற்கான முழு முயற்சியையும் நாம் செய்ய தயாராக இருக்கின்றோம். ஏனைய கட்சிகள் இணைகின்ற போது தனிப்பட்ட கட்சிகள் தமக்கு அதிகாரங்களை கூட்டுகின்ற செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது. தேர்தலில் தோற்றவர்களை சேர்க்கக்கூடாது என நாம் யோசிக்கவில்லை. அது மக்களின் விருப்பம். ஒற்றுமையை கொண்டு வர வேண்டும். அதனைத் தான் மக்கள் விரும்புகிறார்கள். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி எமது ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் கிடைத்த வெற்றி. இதில் தோற்றவர்கள், வென்றவர்கள் என்று அல்லாமல் எமது மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கான கடமை எமக்கு இருக்கிறது.

எந்தவொரு கட்சி விடயத்திலும் ஆளுமை செலுத்தும் கட்சியாக கூட்டமைப்பு இருக்க கூடாது. அந்தவகையில் சின்ன சின்ன விடயங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். ஜனநாயகம் என்பது அந்த வரம்புகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

மக்களது விருப்பம் தான் முக்கியம். பிரிந்து சென்றவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுக்கிறது. ஜனநாயக முறையில் எல்லோரது கருத்துக்களும்கேட்கப்பட வேண்டும் என்பது தான் எல்லா கட்சிகளினதும் விருப்ப மாகவுள்ளது. மக்களது ஆணையை மீண்டும் கூடுதலாக பெற வேண்டுமாக இருந்தால் எல்லா கட்சிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணையும் போது, அவை சமனாக நடத்தப்பட வேண்டும்.

எல்லா கட்சிகளும் மக்களுக்காக செயற்படுவதாக சொல்கிறார்கள். அவர்கள் உளத் தூய்மையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைய வேண்டும் எனத் தெரிவித்தார். (5-4-250)

# அபிவிருத்திட்டத்தை மீள ஆரம்பிக்க கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று, நிதி மூலதன சந்தை அரச தொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கன் இந்தக் கோரிக்கையை அவ ரிடம் விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்து பேரவை உறுப்பினர்களுடன் உரையாடிய போதே இக் கோரிக்கையை முன் வைத்தார்.

தற்போது அங்கு புதிதாக தொழில்நுட்பபீடமும் ஆரம்பிக்கப்பட்டு 2500க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

எனினும், அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகமும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்து வருகிறது.

இலங்கையின் 25 மாவட்டங்களில் வறுமையில் முதலிடத்தில் கிளிநொச்சி இருந்து வரும் நிலையில், இந்தத் திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் வறுமையைப்போக்கவும்பங்களிக்க முடியும் என்றும்இதன்போது றுஷாங்கன் சுட்டிக்காட்டினார். (5-350-4)



வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தின் 2012 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களால் நேற்று முன்தினம் குருதித்தானம் வழங்கப்பட்டது. (படம்: சதீஸ்)

# விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் இருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்களால் மேற்கொள்ளபபட்ட விசேட நடவடிக்கையில் கஞ்சாப் பொதிகளுடன் இருவர் வெவ்வேறு பகுதிளில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து 3 கிலோ 85 கிராம் கஞ்சாவும் மற்றுமொருவரிடமிருந்து ஒரு கிலோ 890 கிராம் கஞ்சாவும் வவுனியா மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றினர்.

விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட இருவரும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# இலங்கை அரசின் சுருதி மாறத் தொடங்கியுள்ளது

## சிறீதரன் எம்.பி.

(கிளிநொச்சி)

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தால் இலங்கை அரசின் சுருதி மாறத் தொடங்கியிருக்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய காலகட்டம் என்பது இலங்கைக்கு மிக முக்கியமான காலகட்டமாக இருக்கிறது. இந் நூற்றாண்டின் மிகப் பெரும் மனித அவலத்தை சுமந்தவர்கள் தமிழர்கள். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கண்டு அஞ்சவில்லை என்று கூறிய அரசாங்கம் சர்வதேச அழுத்தத்திற்கு அச்சம் கொண்டிருக்கிறது என்பதை நாம் இப்போது உணரக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது காணாமல் போன உறவுகளை சந்திக்க தயார் என்கிறார். வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தற்போது இந்தியாவிடம் மன்றாடுகிறார். நடுநிலை வகிப்பது முறையல்ல என்று கூறுகிறார் முஸ்லிம்களின் ஜனாஸாவை



அடக்கம் செய்ய மறுத்து வந்த அரசாங்கம் தற்போது அனுமதித்திருக்கிறது.

இவை எல்லாம் எப்படி எதனால் நடக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த அரசு இவ்வாறு தனது சுருதியை மாற்றத் தொடங்கியிருக்கின்றது.

பிரதான காரணம் இலங்கை அரசு அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டு பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதே இதற்குக் காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (5)

# வயல் காணி வழங்கப்பட வேண்டும் பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு வயல் காணி வழங்கப்பட வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களுக்கு வயல்காணி வேண்டும் என 2018 ஆம் ஆண்டு முதல்ஆறுமுகத்தான்குளம்கிராம மக்கள் போராடி வருகின்றனர்.

இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பிரதேச செயலாளர் மற்றும் வனவள திணைக்களத்தினரால் காணிகள் விடுவிக்கப்பட்டவுடன் ஆறுமுகத்தான்குள மக்களுக்கு முன்னுரிமைப்படுத்தி காணிகள் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர்.

ஆறுமுகத்தான்குளத்தில் வாழ்கின்ற 110 குடும்பங்களுக்கும் வயல் காணி வழங்குவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குருந்தூர் குளம், நித்திகைகுளம் என்பவற்றின் கீழ் வயல் நிலம் காணப்படுகின்றது. வறுமையுடன் வாழ்கின்ற ஆறுமுகத்தான்குளம் மக்களுக்கு விரைந்து வயல் காணி வழங்கப்பட வேண்டும்.

வனவளத் திணைக்களத்திடமிருந்து குறித்த வயல் காணிகளை கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மீட்டு ஆறு முகத்தான்குளம் கிராம மக்களுக்கு வழங்க வேண்டும்என அவர்மேலும் தெரிவித்தார். (5-4-350)

## இராசிபலன்

02.03.2021
மாசி 17, செவ்வாய்க்கிழமை
திருதியை முற்பகல் 9.15 மணிவரை
அத்தம் முற்பகல் 8.47 மணிவரை
சுபநேரம் 10.57-12.27 மணிவரை
இராகுகாலம் 3.27-4.57 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தரட்டாதி
சங்கடஹர சதுர்த்தி விரதம் வளவன்

**மேஷம்** — கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்** — குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் இனிமை தென்படும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி** — கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்ினரை அனுசரித்துச் செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** — புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**தனுசு** — வருங்கால நலன்கருதி முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்** — ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ரோக பயமுண்டு.

**கும்பம்** — குடும்பத்தினரிடையே கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, துயரங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மீனம்** — சொந்த இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய முயற்சிகள் முன்னேற்றம் தரும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

பல தடை உடையவனே வாழ்க்கையில் முன்னேறுவான்

# பணிநீக்கம் செய்யப்படும் ஊழியர்களுக்கான நட்ட ஈட்டுத் தொகை 25 இலட்சமாக உயர்வு

(கொழும்பு)

**தனியார் மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் நிறுவனங்களில் ஊழியர்களை பணிநீக்கம் செய்யப்பட்டதன் அடிப்படையில் ஒரு ஊழியருக்கு வழங்க வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை 2.5 மில்லியன் ரூபாயாக (25 இலட்சம்) அதிகரித்துள்ளது.**

இந்த அறிவிப்பானது பெப்ரவரி 19ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையிலான வர்த்தமானி அறிவிப்பு இலங்கை தொழில் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிமுறையினை மீறினால், உரிய நபர்களுக்கு எதிராக இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் சந்திரகீர்த்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சட்டத்தில் இவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன் முன்னதாக பணிநீக்கம் செய்யப்படும் ஊழியருக்கு வழங்க வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை 1.25 மில்லியன் (12,50,000) ரூபாயாக காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இனங்களுக்கிடையே தேவையற்ற முரண்பாட்டை அரசே தோற்றுவித்துள்ளது

## ஜனாஸாக்கள் தகனம் குறித்து தேரர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய முடியும் என அரசாங்கம் எந்நிலைப்பாட்டில் இருந்து அறிவித்துள்ளது என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். சர்வதேச நாடுகளின் கட்டளைக்கு அடிபணிந்து அரசாங்கம் செயற்படுகிறது. உடல்களை புதைப்பதா? அல்லது தகனம் செய்வதா? என்ற விடயத்தில் இனங்களுக்கிடையில் தேவையற்ற முரண்பாட்டை அரசாங்கமே தோற்றுவித்தது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை அரசாங்கம் முழுமையான தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொண்டது. ஒரு நாடு ஒரு சட்டம் என்பதை உறுதியாக பின்பற்றுவதாக குறிப்பிட்டவர்கள் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தற்போது கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

தேசப்பற்று, ஒரு நாடு ஒரு சட்டம் ஆகியவை அரசாங்கத்திற்கு வெறும் தேர்தல் கால பிரசாரம் என்பதை பெரும்பான்மை மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். பொதுத்தேர்தலில் அரசாங்கம் பௌத்த சிங்கள மக்களை கவர்வதற்காக ஒரு நாடு ஒரு சட்டம் என்ற விடயத்தை பிரசாரமாக்கி அதில் பயன் பெற்றுக்கொண்டது.

கொவிட்-19 தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய முடியும் என துறைசார் வைத்திய நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்தும் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. உடல்கள் தகனம் செய்யப்படும் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது என்பது உறுதி என்று பல முறை ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கொண்டார்கள். இதனை கொண்டு சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் தேவையில்லாத பிரச்சினைகளை அரசாங்கம் தோற்றுவித்தது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய முடியும் என்ற தீர்மானத்தை அரசாங்கம் ஏன் திடீரென எடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளின் விருப்பத்திற்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. நாட்டின் இறையாண்மை என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். ஆகவே நாட்டு மக்கள் இனியாவது புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும் எனத் தேரர் தெரிவித்தார். (நி-4)

# தொடரூந்து- பேருந்து விபத்து இருவர் காயம்



(கொழும்பு)

இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று தொடரூந்தினால் மோதப்பட்டதில் இருவர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த இடத்தில் லொத்தர் சீட்டுகளை விற்று வரும் அதனை கொள்வனவு செய்த ஒருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தினால் பேருந்தில் பயணித்த எவரும் காயமடையவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளையிலிருந்து தொரணவீதிக்கு சென்று கொண்டிருந்த பேருந்து நேற்றுக் காலை பொல்கஹாவெலவிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த தொடருந்தினால் மோதப்பட்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (நி-4)




# யார் வள்ளல்?

முன்னொரு காலத்தில் பொதிகை மலையை நன்மாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். வாரி வழங்கும் வள்ளலாக இருந்த அவன் புகழ் எங்கும் பரவியது. கரூர் அரசன் மணிமாறன் இதைக் கேள்விப்பட்டான்.

“சிறிய பகுதியை ஆளும் நன்மாறனுக்கு இவ்வளவு பேரா? நான் அவனைவிட வாரி வழங்கும் பெரும் புகழும் பெற வேண்டும்”என்று நினைத்தான்.

தன் பிறந்த நாளன்று மக்களுக்கு வாரிவழங்கப் போவதாக அறிவித்தான். பிறந்த நாள் வந்தது. பரிசு பெறுவதற்காக நிறையைப் பேர் அரண்மனை முன் கூடினர். அங்கிருந்த மேடையில் நின்றபடி ஒவ்வொருவருக்கும் பரிசு வழங்கிக் கொண்டிருந்தான் அவன்.

அப்போது தெற்கு வாயில் வழியாகக் கிழவி ஒருத்தி வந்தாள். அவன் முன் கை நீட்டினாள். அவனும் பரிசு தந்து அனுப்பினான். சிறிது நேரம் சென்றது. மேற்கு வாயில் வழியாக அவள் வந்தாள் அவன் முன் கையை நீட்டினாள். மீண்டும் பரிசு பெற அவள் வந்திருக்கிறாள் என்பதை அவன் தெரிந்து கொண்டான். அவளுக்குப் பரிசு தந்து அனுப்பினான்.

மூன்றாம் முறையாக அவள் வடக்கு வாயில் வழியாக வந்தாள். கையை நீட்டினாள். இந்தக் கிழவி திரும்பவும் வந்திருக்கிறாளே என்று முகத்தைச் சுளித்துக் கொண்டான். வேண்டா வெறுப்பாக அவளுக்குப் பரிசு தந்து அனுப்பினான்.

திரும்பத் திரும்பத் தான் வருவதை அரசர் தெரிந்து கொண்டார். அதனால்தான் வெறுப்பைக் காட்டுகிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. இருந்தும் அவள் நான்காம் முறையாகக் கிழக்கு வீதி



வழியாக வந்தாள். அரசனின் முன் கையை நீட்டினாள். அவளைப் பார்த்ததும் அவனால் கோபத்தைஅடக்கமுடியவில்லை.

“கிழவி நீ எத்தனை முறை தான் பரிசு பெற்றுச் செல்வாய்? என்னை ஏமாளி என்று நினைத்துக் கொண்டாயா? உனக்குப் பரிசு ஏதும் தர மாட்டேன்,” என்று அவளை விரட்டினான்.

அங்கிருந்து செல்லாத அவள், “அரசே! உங்களைப் போலவே பொதிகை மலை அரசர் நன்மாறனும் பிறந்த நாள் பரிசு வழங்கினார். அவரிடம் நான் திரும்பத் திரும்பப் பதினாறு முறை சென்று கையை நீட்டினேன். என்னைத் தெரிந்ததாகவே அவர் காட்டிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு முறையும் சிரித்த முகத்துடன் பரிசு தந்து அனுப்பினார்.

ஆனால், நீங்களோ நான் மூன்றாவது முறை வந்த போதே கோபத்தைக் காட்டினீர்கள். நான்காவது முறை இல்லை என்றே விரட்டுகிறீர்கள்!” என்றாள்.

இதைக் கேட்ட அவன் தன்னால் நன்மாறனைப் போல வள்ளலாக முடியாது என்பதை அறிந்து கொண்டான்.

# மகாபாரதம்




அம்பை, அம்பிகை, அம்பாலிகை

சந்தனுவிற்கும், அவளுக்கும் முதலில் சித்திராங்கதன் என்னும் மகன் பிறந்தான். பின் விசித்திரவீரியன் பிறந்தான். சந்தனு மரணம் அடைந்ததும் பீஷ்மர் சித்திராங்கதனை அரசனாக்கினார்.

ஒருசமயம் அவன் கந்தர்வ நாட்டு அரசனு டன் போர் செய்ய நேர்ந்தது. அந்த கந்தர்வ அரசன்பெயரும் “சித்திராங்கதன்”. உன் பெயரை மாற்றிக் கொள்” என்றான் கந்தர்வ மன்னன். இல்லாவிட்டால் போரிட வா” என சவால் விட்டான். போரில் சந்தனுவின் மகன் மரணம் அடைந்தான்.

பீஷ்மர் அடுத்து விசித்திர வீரனை அரசனாக்கினார். அவனுக்கு மணம் முடிக்க எண்ணினார். அந்தச் சமயம் காசி நாட்டு மன்னன் அவனது மூன்று மகளுக்கும் சுயம்வரம் நடத்துவது அறிந்து பீஷ்மர் காசியை அடைந்தார்.

சுயம்வரத்தில் பல அரசர்கள் கூடியிருந்தனர். அம்பை, அம்பிகை, அம்பாலிகைஎன்பது அவர்களது பெயர். பீஷ்மரின் வயது கண்டு அவர்கள் விலகினர். சில மன்னர்கள் பீஷ்மரை பார்த்து “நரை கூடிய கிழப்பருவத்தில் திரு மண ஆசையா... உன் பிரம்மச்சரிய விரதம் என்னவாயிற்று” என்று சிரித்தனர்.

பீஷ்மர் கடும் கோபம் அடைந்தார். மூன்று பெண்களையும் பலவந்தமாக தேரில் ஏற்றிக் கொண்டு வந்தார். மன்னர்கள் முறியடிக்கப் பார்த்து தோற்றனர். ஆயினும், சௌபல நாட்டு மன்னன் சால்வன் கடும் போர் செய்து தோற்று ஓடினான். பின் பீஷ்மர் மூன்று பெண்களையும் தன் மகள் போல, மருமகள்கள் போல அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரம் வந்தார். அப்பெண்களை விசித்திர வீரியனுக்கு திருமணம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

அப்போது அப்பெண்களில் மூத்தவள் அம்பை “என் மனம் சௌபல நாட்டு மன்னன் சால்வனிடம் சென்று விட்டது. அவனையே மணாளனாக அடைவேன் என்றாள்.

உடன் பீஷ்மரும் பெண்ணே! உன் மனம் அவனை நாடினால் தடையேதும் இல்லை. இப்பொழுதே நீ அவனிடம் செல்லலாம் என்றார்.

அம்பையும் சௌபல நாடு நோக்கி சென்றாள். சால்வனை சந்தித்த அம்பை, மன்னா நாம் முன்னரே உள்ளத்தால் கலந்துள்ளோம். இப்போது முறைப்படி மணம் செய்து கொள்வோம் என்றாள். அதற்கு சால்வன் “பெண்ணே மன்னர் பலர் இருந்த அவையிலிருந்து பல வந்தமாக பீஷ்மர் உன்னைக் கவர்ந்து சென்றார்.

மற்றவரால் கவரப்பட்டு பின் அவர் வீட்டிலிருந்து அனுப்பப்பட்ட பெண்ணை திருமணம் செய்ய மாட்டேன். நீ திரும்ப செல் என்றான். சால்வனின் இந்த முடிவினால் என்ன செய்வது என்று அறியாத அம்பை மீண்டும் அஸ்தினாபுரம் சென்றாள். பீஷ்மரை நோக்கி சுயம்வர மண்டபத்திலிருந்து என்னை கவர்ந்து வந்த நீரே தர்மசாத் திரப்படிஎன்னை மணம் புரிய வேண்டும் என்றாள். ஆனால், பீஷ்மரோநான் பிரமச்சரிய விரதம் பூண்டுள்ளேன் எனக்கூறி மறுத்தார்.

(தொடரும்)

# சேவை நலன் பாராட்டு

**காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சேவையில் இருந்து 2021.03.02 இன்று ஓய்வுபெறுகின்றார்.**

ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, மொழிபெயர்ப்பாளராக, ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு தேசிய மட்டத்தில் பயிற்றுவிக்கின்ற தேசிய வளவாளராக, அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இரண்டாம் மொழி சிங்கள மொழியின் தேசிய வளவாளராக, அகில இலங்கை சமாதான நீதவானாக பணியாற்றி 35 வருட சேவையின் பின்னர் ஓய்வுபெறுகின்றார்.



## திரு. ஆறுமுகம் குமரேசமூர்த்தி

BA, MA, MPhil, Q, MEd, MPhil,Sp. Sc. Trd, SLPS 1,
PG.Dip.in.Ed , (Merit), PG.Dip. in.Ed. Mgt (Merit)
ALIC (Sinhala), ALIC(English), Dip.in.Tl (Sinhala-Tamil)
HDip. in.TL (Sinhala-Tamil-English.)

தந்தையார் பெயர்: கதிர்காமு ஆறுமுகம்
தாயார் பெயர்: மகேஸ்வரி ஆறுமுகம்
பிறந்த இடம்: வாரிவளவு, காரைநகர்
ஆரம்பக்கல்வி:
பு/ஹாலி-எல முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹாலி-எல
யா/வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்.
யா/யாழ்ற்ரன் கனிஷ்ட வித்தியாலயம். காரைநகர்.
இடைநிலைக்கல்வி. உயர்நிலைக்கல்வி:
யா/யாழற்ரன் கல்லூரி, காரைநகர்.

**சேவை விபரம்**

05.8.1985-31.12.1987 ஆசிரியர், ப/ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம், ஹப்புத்தளை.
01.01.1988-31.12.1989 பயிற்சி ஆசிரியர், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை, யாழ்ப்பாணம்.
01.01.1990-31.12.1991 ஆசிரியர், க/நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி (தேசிய பாடசாலை) நாவலப்பிட்டி.
01.01.1992-26.12.1998 ஆசிரியர் யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் (தேசிய பாடசாலை)
27.12.1998-02.05.2008 அதிபர், யா/ வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்.
03.05.2008-06.07.2015 அதிபர், யா/காரைநகர் இந்துக்கல்லூரி, காரைநகர் (தேசிய பாடசாலை)
07.07.2015-17.01.2016 அதிபர், யா/சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயம். மானிப்பாய்.
18.07.2015-01.03.2021 கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலகம், காரைநகர்.

ஒய்வுக் காலத்தில் தனது குடும்பத்தாருடன்
சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றேன்

(6952) **அன்புடன் வாழ்த்தும்: வீ.ஆ.சிவஞானம் (ஆசிரியர்) காரைநகர்.**


# இலங்கையில் தயாரிக்கப்பட்ட முகக்கவசம் வைரஸ்களை அழிக்கும்

(கொழும்பு)

**கொவிட்-19 உள்ளிட்ட வைரஸ்களை அழிக்கும் முகக்கவசத்தை நீண்ட ஆராய்ச்சியின் பின்னர் பேராதனை பல்கலைக்கழக வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.**

இந்த முகக்கவசம் தொடர்பிலான ஆராய்ச்சியை முன்னின்று நடத்திய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை மூத்த பேராசிரியர் காமினி ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இதனை பிரதமருக்கு வழங்கி அறிமுகம் செய்துவைத்தார்.

மூன்று அடுக்குகளை கொண்ட இந்த முகக்கவசம் உலகில் மிகவும் சிறப்பு வாய்ந்த முகக்கவசங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த முகக்கவசத்தில் உள்ள மூன்று அடுக்குகளில் முதல் அடுக்கு உமிழ்நீர் போன்ற திரவங்களை உடனடியாக அகற்றும் வகையில் செயற்படுகிறது.

இரண்டாவது அடுக்கில் உள்ள ஒரு விசேட இரசாயன பதார்த்தம் வைரஸ்களை அழிக்கும்.

மூன்றாவது அடுக்கு உமிழ்நீர் துளிகளை ஆவியாக்குவதற்கான நுட்பத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது என இதனை வடிவமைத்த பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த முகக்கவசத்தை தொடர்ச்சியாக 25 தடவைகள் மீண்டும் கழுவி பயன்படுத்தலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது பயன்படுத்தப்படும் கே.என். 95 முக்கவசங்களை விட இந்த முகக்கவசம் மிகவும்பாதுகாப்பானது என்பதை தமது ஆய்வுகள் வெளிப்படுத்துவதாக ஆராய்ச்சி குழுவில் ஒருவரான டாக்டர் சமிந்த ஹேரத் தெரிவித்தார். (நி-4)


## மணமகள் தேவை

யாழ். இந்து தென்மராட்சி கௌரவ குடும்பம் பிரான்ஸில் வதிவிட உரிமை அற்ற (P.R) நிலையில் வசித்து வரும் மணமகனுக்கு பிரான்ஸ் நாட்டில் வதிவிட உரிமை (P.R) உள்ள மணமகள் தேவை. மணமகன் 1983 இல் பிறந்தவர். இவர் 8 இல் செவ்வாய் கேது. திசை. செவ்வாய் புத்தி 7 ஆதிபன் கிரகபாவம் 54 1/4 உள்ளவர். 1 இல் செவ்வாய். 7 இல். 8 இல் செவ்வாய். உதயத்துச் செவ்வாய் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு - 077 629 5201**


# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை; மௌனம் காக்கும் மைத்திரி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரையில் எவ்விதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இந்த விடயம் குறித்து அறிய ஆங்கில ஊடகமொன்று அவரை தொடர்புகொள்ள முயற்சித்த நிலையில், இந்த நேரத்தில் இந்த அறிக்கை குறித்து கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என முன்னாள் ஜனாதிபதி கூறியதாக அவரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்த நேரத்தில் பதிலளிக்க வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழு முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தலவாக்கலையில் தீப்பரவல் 30 ஏக்கர் வனப்பகுதி நாசம்



(தலவாக்கலை)

தலவாக்கலை - சென்.கிளயார் வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் சுமார் 30 ஏக்கர் வரையான வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

சென்.கிளயார் வனப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி முதல் தீப்பரவல் ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து தலவாக்கலை பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்துவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், தற்போது கடும் வறட்சி நிலவுவதால் தீ வேகமாக பரவி சுமார் 30 ஏக்கர் வரை தீக்கிரையாகியுள்ளன.

மனித செயற்பாடு மூலமே இத்தீப்பரவல் ஏற்பட்டிருக்கும் என சந்தேகிக்கும் பொலிஸார், அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா: - செவ் 9 சூரி 8 இல் தகைமை/தொழில்: B.Sc Q.S,H.N.D, Work –Q.S எதிர்பார்ப்பு: பட்டதாரி. வங்கி,ஆசிரியை வேலை. வெளிநாடும். உள்நாடும் எதிர்பார்க்கப்படுகிறது . தொ.இ: B/11523 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: மூலம் கி.பா: 1 செவ் 5 சூரி 6 இல் உயரம்: 5'8" தகைமை/தொழில்: 5 வருட மருத்துவ மாணவி எதிர்பார்ப்பு: வைத்தியர் தொ.இ: G/11578 |
| பிறப்பு: 1974 கிறிஸ்தவம் நட்சத்திரம்: அவிட்டம் கி.பா: செவ் 5 சூரி 6 இல் உயரம்: 5.2 தகைமை/தொழில்: A/L, சொந்தக்கடை எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் தொ.இ: B/11524 | பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா: 5.7 செவ் 2 சூரி 1 இல் உயரம்: 5.7 தகைமை/தொழில்: (B.Eng) அரச முகாமைத்துவ உதவியாளர் எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம், ஆசிரியர் வேண்டாம் தொ.இ: G/11581 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: செவ்,சூரி 6 இல் தகைமை/தொழில்: A/L வாகன கடை விற்பனையாளர் எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண் தொ.இ: B/11525 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா: 66 1/2 செவ் 12 சூரி 1 இல் உயரம்: 5.2 தகைமை/தொழில்: BBA, ACCA, தனியார் துணை விரிவுரையாளர் எதிர்பார்ப்பு: படித்த தனியார் அரச உத்தியோகத்தர் தொ.இ: G/11587 |
| பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: கேட்டை கி.பா: 12 1/4 செவ் 5 சூரி 10 இல் உயரம்: 5.9 தகைமை/தொழில்: - Postal work (G.O.V) எதிர்பார்ப்பு: அரச தொழில் தொ.இ: B/11526 | பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: ரேவதி கி.பா: 09 செவ் 2 சூரி 3 இல் உயரம்: 5'2" தகைமை/தொழில்: Civil Eng, நிரந்தர தொழில்நுட்ப உதவியாளர் எதிர்பார்ப்பு: மணமகள் விவாகரத்தானவர். விவாகரத்து ஆகி பிள்ளைகள் இல்லாத வரன் ஏற்கப்படும் தொ.இ: G/11591 |

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் தேவையற்று ஒலி எழுப்புவதற்குத் தடை

**(கொழும்பு)**

**நாடளாவிய ரீதியில் நேற்று கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பித்த நிலையில் பரீட்சை நிலையங்களை அண்மித்துள்ள பகுதிகளில் ஒலி மாசு தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இதுபோன்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசேட நடவடிக்கை மேற்கொள்ள பிராந்திய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறும் காலத்தில் பொலிஸார் கல்வி மற்றும் சுகாதார பிரிவுகளுடன் நெருக்கமாக செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுதிய கொரோனா தொற்றுக்குள்ளான 38 பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

ஆரம்பமாகியுள்ள 2020 க்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் வரவானது நேற்றைய தினம் திருப்பதிகரமாக அமைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு பரீட்சை நிலையங்களில் 38 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதியுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த பரீட்சையில் 6 இலட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் தோற்றுகின்றனர். இவர்களில் 4 இலட்சத்து 33 ஆயிரத்து 746 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். நாடு பூராகவும் 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் நலன் கருதி சகல மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் இரண்டு விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உடல்களை நல்லடக்கம் செய்ய தனித்தீவு

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய சூனியப் பிரதேசமான தீவு ஒன்றை தெரிவு செய்ய கொவிட்-19 செயலணிக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

அதேநேரம் நல்லடக்க வழிமுறைகள் உள்ளடங்கிய வழிகாட்டி அறிக்கையை இந்த வாரம் இறுதிக்குள் வெளியிடவும் சுகாதார பணியகம் தீர்மானித்துள்ளது.

கொவிட் -19 வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்கக்கோரி தொடர்ச்சியாக முஸ்லிம் தரப்பினர் வலியுறுத்தி வந்த நிலையில் சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தேசிய அழுத்தங்கள் காரணமாக தற்போது உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதிப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் நல்லடக்கம் செய்ய முன்னர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும், பொது இடங்களில் அல்லது பொது மயானங்களில் நல்லடக்கம் செய்ய அனுமதிக்க முடியுமா? என்பது குறித்து கொவிட் -19 செயலணிக் கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சுகாதாரத் தரப்பின் தீர்மானம் என்ன என்பது குறித்து பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்திடம் வினவிய போது அவர் மேற்கண்டவாறு கூறினார். (நி-4)

## விமானப் படையின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பதவி உயர்வு

(கொழும்பு)

விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இலங்கை விமானப் படையில் 467 அதிகாரிகள் உள்ளிட்ட மொத்தம் 7,290 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை தனது கீர்த்திமிகு 70 ஆவது ஆண்டு நிறைவினை இன்று மார்ச் 2 ஆம் திகதி கொண்டாடவுள்ளது.

அதன்படி கொழும்பு, கட்டுநாயக்க உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து விமானப் படை முகாம்களிலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2242

### ரிது

நம்ம
கொஸ்பிற்றல்
விளம்பரத்துக்கு
நல்ல பஞ்ச்
டயலொக் சொல்லு





கூட்டிட்டு வாங்க
தூக்கிட்டுப் போங்க
பணம் எங்களுக்கு
பிணம் உங்களுக்கு

### கிசாலினி

மனிதனாக வாழ்வது சுலபம்



ஆனால்...? மனிதாபிமானத்தோடு வாழ்வதுதான் கடினம்

### கனுசாந்

பரிதாபப்பட எல்லோராலும் முடியும்



ஆனால்...உதவி செய்ய ஒரு சிலரால் மட்டுமே முடியும்...!

### ரிசிக்கா

மிளகாய்ப்பொடி மிளகாயில இருந்து வருகுது
மஞ்சள் பொடி மஞ்சளில இருந்து வருகுது



அப்ப பல் பொடி பல்லில இருந்துதானே வரனும்.....ஏன் கடையில வாங்கிறோம்


### பிரியா

கார் இல்லை என்று கவலைப்பட்டு நிற்காதே!



கால் இல்லாதவன் உன்னைக்கடந்து போவதைப் பார் அப்பொழுது புரியும் வாழ்வின் அர்த்தம்...!

### பவி



நாளைக்கு பண்ணிக்கலாம்ன்னு தள்ளிப் போடாம எல்லாருமே செய்யிற ஒரே விடயம் மொபைலுக்கு சார்ஜ் போடுறதாத்தான் இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசியல் களத்தில் குதித்தார் மகிந்தவின் இளைய புதல்வன்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷ தனது அரசியல் செயற்பாடுகளை தந்தை தேர்தலில் போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்தில் ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்கிறார்.

கடந்த பாராளுமன்ற தேர்தல் காலத்திலும் ரோஹித ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் தந்தைக்காக பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில் குருநாகல் கிரிபாவ கிராமத்திற்கு விஜயம் செய்து அங்கு வாழும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

பிரதமரின் வழிகாட்டலில் பெண்களுக்கான தொழில் வாய்ப்பு குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார்.


குறித்த கிராமத்தில் செருப்பு தயாரிக்கும் பெண்களின் கைத்தொழில் குறித்தும் ரோஹித ராஜபக்ஷ அவதானித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றம் சென்றுள்ளதால் மகிந்த குருநாகல் மாவட்டத்தை தேர்ந்தெடுத்தார்.

இரண்டாவது மகன் யோசித ராஜபக்ஷ பிரதமர் அலுவலக பிரதானியாக செயற்படுகிறார்.

தற்போது மூன்றாவது மகனும் குருநாகல் மாவட்ட களத்தில் பணியாற்ற ஆரம்பித்துள்ளார். (நி-4)

# தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்தை தாண்டியது



(கொழும்பு)

இலங்கையில் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா ஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசி டோஸ்களை பெற்றவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 66 ஆயிரத்து 350 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 24 ஆயிரத்து 374 பேருக்கு தடுப்பூசி வழங்கியதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையாக ஜனவரி 28ஆம் திகதி கிடைக்கப்பெற்ற கொவிஷீல்ட் 5 இலட்சம் தடுப்பூசிகளில் 4 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு இதுவரை தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்கின்றது.

அத்தோடு, அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவின் சீரம் நிறுவனத்தினால் மேலும் 5 இலட்சம் கொவிஷீல்ட் தடுப்பூசி கடந்த 25ஆம் திகதி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசியைப் பரிசீலிக்க தயார்

(கொழும்பு)

அமெரிக்காவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஒரு டோஸ் அளவு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசியை பரிசீலிக்க இலங்கை தயாராகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசிக்கு இலங்கை தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டால் அது பரிசீலிக்கப்படும் என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளன.

தடுப்பூசியின் செலவு குறைவாக உள்ளது என்றும் தடுப்பூசியை குளிர்சாதன பெட்டியில் சேமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இந்திய விமானப்படையின் 25 விமானங்கள் இலங்கையை வந்தடைந்தன



(கொழும்பு)

இந்திய விமானப் படையின் 25 விமானங்கள் இலங்கைக்கு வந்துள்ளன.

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு நாள் இன்று விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்துடன், மார்ச் 3 ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை காலி முகத்திடலில் விமானக் கண்காட்சியொன்றும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய விமானப்படை விமானங்கள் இலங்கைக்கு வந்துள்ளன. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நல்ல நகைச்சுவை

ஒரு வீடு.கதவு சாத்தியிருக்கிறது. அந்த வெளிக் கதவிலே பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பூட்டை பூட்டாமல் விட்டுவிட்டார்கள் போல இருந்தது. அதனால் திறந்தபடியே அது தொங்கிக் கொண்டிருக்கிறது. தெரு வழியாக போய்க் கொண்டிருந்த ஒரு பையன் இதைப் பார்த்து விடுகின்றான்.

உடனே மெதுவாக அந்தக் கதவின் அருகே போகின்றான். நைசாக அந்த பூட்டை எடுத்து சட்டைப் பையில் போட்டுக் கொண்டு நழுவி வருகின்றான்.

கலைவாணர் என். எஸ். கே. கொஞ்ச தூரத்தில் இருந்து இதைப் பார்த்துவிடுகின்றார். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளா மல் தம்பி இங்கே வாப்பா என்று கூப்பிடுகின்றார்.அவனும் தான் திருடியதைக் காட்டிக் கொள்ளாமல் மிகவும் சாதுவாக இவர் முன் வந்து நிற்கின்றான்.

தம்பி பையில் என்ன இருக்கு? என்று கேட்கின்றார்.அது வந்து ஒன்றுமில்லையே என்கின்றான் பையன்.

எங்கே காட்டு பார்க்கலாம் என்று சொல்லி அவன் சட்டைப் பையில் கையை விடுகின்றார் பூட்டு.

கையும் களவுமாக பிடிபட்டுவிட்டான் அந்தப் பையன். ஐயா தெரியாமல் செய்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்கின்றான்.

ஏன்டா எடுத்தாய் இதை என்கின்றார்.

பசி–அதனால் தான் எடுத்தேன். பழைய சாமான் கடையில் போட்டால் இரண்டு ரூபா கிடைக்கும். சாப்பிடலாம் என்று நினைத்து எடுத்துக் கொண்டேன் என்று உண்மையைச் சொல்லி விட்டான் அந்தப் பையன்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கின்ற பொழுதே அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் வெளியே வந்துவிட்டார். கதவிலே பூட்டு இல்லாததைப் பார்த்தார். தெருவிலே கலைவாணர் ஒரு பையனிடம் பேசிக் கொண்டிருக்கின்றதையும் பார்த்தார்.

அந்தப் பையன் தான் பூட்டை எடுத்திருப்பான். என். எஸ். கே. தான் அவனைக் கையும் களவுமாக பிடித்து வைத்திருக்கின்றார். போல் இருக்கிறது என்று யூகம் செய்து கொண்டார்.

மிகவும் ஆத்திரத்தோடு அவர்களை நோக்கி நடந்தார்.இதைக் கவனித்துவிட்டான் பையன். கலைவாணரை மிகவும் பரிதாபமாகப் பார்த்தான் என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதீர்கள் என்பது போல்.

கலைவாணர் ஒரு கணம் யோசித்தார். இதற்குள்ளே அந்த வீட்டுக்காரர் இவர்களை நெருங்கி வந்துவிட்டார். கலைவாணர் சிரித்துக் கொண்டே அவரைப் பார்த்து வாங்க வாங்க என்ன வீட்டுக் கதவிலே பூட்டைக் காணவில்லை என்று பார்க்கின்றீர்களா? கொஞ்ச நேரத்திற்கு முன்னர் யாரோ ஒரு பையன் அந்தப் பூட்டை எடுத்துக் கொண்டு ஓடினான். இதோ இந்தத் தம்பி தான் அவனை விரட்டிப் பிடித்து பூட்டைப் பறித்து திருப்பி எடுத்துக் கொண்டு வந்தான்.. நான் வாங்கி வைத்திருக்கின்றேன். இந்தாங்க பூட்டு.

பாவம் பையன். பையன் மிகக் கஷ்டப்பட்டு ஓடிப் பிடித்திருக்கின்றான். இவனுக்கு ஒரு இருபது ரூபாய் கொடுத்து அனுப்புங்கள். டேய் தம்பி ஐயா இருபது ரூபாய் கொடுப்பார் போய் வாங்கிக் கொண்டு போ என்கின்றார்.இது தான் கலைவாணர். அவருடைய அந்தச் செயல் சிரிக்கவும் வைக்கிறது சிந்திக்கவும் வைக்கின்றது.இல்லையா?

அது தான் ஒரு நல்ல நகைச் சுவையின் இலக்கணம். சொந்த கஷ்டங்களைக் கூட அவர் எடுத்துக் கொள்கின்ற விதம் இருக்கே.. அது தனி ரகம்.

அவர் சிறைவாசம் முடிந்து வெளியில் வந்த சமயம். ஒருத்தர் அவரிடம் போய்..பார்த்தீர்களா? தேவை இல்லாமல் இரண்டரை வருடம் நீங்கள் சிறையில் இருப்பது போல் ஆகிவிட்டதே இது தலைவிதிதானே என்றார்.


கலைவாணர் அவரைப் பார்த்து..இதற்குக் காரணம் விதி தான். ஆனால் தலைவிதி இல்லை. சட்டம் சொல்கின்ற விதி என்றார். என்னங்க.. இப்படிச் சொல்கின்றீர்களே என்றார் அவர்.

ஆமாம் குற்றவாளி என்று கண்டுபிடிக்கிறதற்கு வருடக் கணக்காக ஆகின்றது.அதேமாதிரி.. ஒருவரை நிரபராதி என்று கண்டுபிடிக்கிறதற்கும் வருடக் கணக்காக ஆகும். அதை நாம் கண்டு பிடிக்கக் கூடாது என்று நிதானமாக பதில் சொன்னார் கலைவாணர்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021


18

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### துருக்கிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை

துருக்கிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இந்த உள்நாட்டு அரசியல் நெருக்கடியை அமெரிக்கா முதிர்ச்சியுடன் சமாளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று இருந்தது.




அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்தில் ட்ரம்ப் ஆதரவு கும்பல் வைத்த ட்ரம்ப் ஆதரவு விளம்பரப் பதாகை

### "மிகுந்த மன உளைச்சலுடனும் வருத்தத்துடனும் உள்ளது" - கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து

அமெரிக்காவில் நடந்த நிகழ்வுகளால் தனது நாடு "மிகுந்த மன உளைச்சலுடனும் வருத்தத்துடனும் உள்ளது" என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார். "வன்முறை ஒருபோதும் மக்களின் விருப்பத்தை மீறுவதில் வெற்றிபெறாது. அமெரிக்காவில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது அப்படியே இருக்கும்" என்றும் அவர் தெரிவித்து இருந்தார்.

### ஜனநாயகச் செயல்முறைகள் மேலோங்க வேண்டும்

193 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் தலைவர் வோல்கன் போஸ்கிர்" இந்த முக்கியமான நேரத்தில் அமெரிக்காவில் அமைதி மற்றும் ஜனநாயக செயல்முறைகளுக்கான மரியாதை மேலோங்கும் என நம்புகிறேன் என்று கூறியுள்ளார்.

நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க் ஜனநாயக தேர்தலின் முடிவுகளை மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். இதேபோல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல தலைவர்களும் அமெரிக்க சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

### அமெரிக்காவில் ஜனாதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுகள் (impeachment)

அமெரிக்காவில் அரசியல் குற்றச்சாட்டு (impeachment) / கண்டனத் தீர்மானம் என்பது ஒரு சட்டமன்றம் (பொதுவாகப் பிரதிநிதிகள் சபை) பாராளுமன்ற உறுப்பினர் அல்லது ஜனாதிபதி ஒருவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வரும் செயல்முறையாகும்.

அமெரிக்காவின் கிட்டத்தட்ட 250 ஆண்டுகால வரலாற்றில் அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுக் கொண்டு வருவது மிகவும் அரிதானது. இது வரை மூன்று ஜனாதிபதிகளுக்கு எதிராகக் அரசியல் குற்றச்சாட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அம்மூவரும் ஜனாதிபதிகளாக இருந்த ஆண்ட்ரூ ஜோன்சன் (1868), பில்கிளிண்டன் (1998) மற்றும் டொனால்ட் ட்ரம்ப் (2019) ஆகியோர் ஆவர். ஆனால் அவர்கள் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. (இருப்பினும் கிளின்டன் மற்றும் ஜோன்சன் குற்றச்சாட்டுக்குப் பின்னர், அவர்களது இருகட்சிகளும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தன. தற்போது டொனால்ட் ட்ரம்பும் தோல்வியடைந்து விட்டார்) அரசியல் குற்றச்சாட்டு (impeachment) முதலில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அங்கு அது பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் அதன் பின் அது செனட் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். செனட் சபையில் அவர் மீது விசாரணை நடக்கும். செனட்டில் அவர் மீதான குற்றத்தை உறுதி செய்ய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை. அங்கு அது நிறைவேற்றப்பட்டால் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார்.

**அமெரிக்காவில் அரசியல் குற்றச்சாட்டு (impeachment) தீர்மானம் என்பது ஒரு சட்ட மன்றம் ஆனது (பொதுவாகப் பிரதிநிதிகள் சபை) பாராளு மன்ற உறுப்பினர் அல்லது ஜனாதிபதி ஒருவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைக் கொண்டுவரும் செயல்முறையாகும். இதுவரை அரசியல் குற்றச்சாட்டு மூன்று ஜனாதிபதிகளுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ளது. அம்மூவரும் ஜனாதிபதிகளாக இருந்த ஆண்ட்ரூ ஜோன்சன் (1868), பில்கிளிண்டன் (1998) மற்றும் டொனால்ட் ட்ரம்ப் (2019) ஆகியோர் ஆவர். இப்போது மீண்டும் இரண்டாவது முறையாக டொனால்ட்ட்ரம்புக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ளது.**

### ஆண்ட்ரூ ஜோன்சனுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு

ஆண்ட்ரூ ஜோன்சனுக்கு எதிரான அரசியல்குற்றச்சாட்டு (impeachment) பெப்ரவரி 24, 1868 இல் கொண்டு வரப்பட்டது. அமெரிக்காவின் 17 ஆவது ஜனாதிபதியான ஆண்ட்ரூ ஜோன்சனை "உயர் குற்றங்கள் மற்றும் தவறான செயல்களுக்காக" குற்றஞ்சாட்ட அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை தீர்மானித்து அவரின் குற்றங்கள் 11 குற்றச்சாட்டுகளில் விபரிக்கப்பட்டிருந்தது.

பிரதிநிதிகள் சபையில் அது நிறைவேறியது. ஜோன்சனுக்கு எதிரான முதன்மைக் குற்றச்சாட்டு என்னவென்றால், மார்ச் 1867 இல் காங்கிரஸால் நிறைவேற்றப்பட்ட பதவிக்காலத்தின் சட்டத்தை அவர் மீறி விட்டார் என்பதாகும். அதன்பின் செனட் சபையில் அவர் மீது விசாரணை நடந்தது. செனட்டில் அவர் மீதான குற்றத்தை உறுதி செய்ய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

ஏழு குடியரசுக் கட்சியினர் அவரைப் பதவியில் வைத்திருக்க செனட் சபையில் ஜனநாயகக் கட்சியினருடன் சேர்ந்து வாக்களிக்க முடிவு செய்ததால். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு ஒரு வாக்கு குறைவாகக் கிடைத்து அது தோற்கடிக்கப்பட்டது.

### பில்கிளிண்டனுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு

முன்னாள் வெள்ளை மாளிகையின் அலுவலரான மோனிகா லெவின்ஸ்கியுடனான கிளிண்டனின் விவகாரம் ஜனவரி 1998 இல் பகிரங்கமான பின்னர், கிளிண்டன் முதலில் கூட்டாட்சிப் புலனாய்வாளர்களுக்கும் பொதுமக்களுக்கும்தான் மோனிகாவுடன் "தகாத உறவு" வைத்திருப்பதைக் கடுமையாக மறுத்தார்.

லெவின்ஸ்கியுடனான தனது உறவு குறித்து புலனாய்வாளர்களிடம் பொய் சொல்வதன் மூலம் கிளின்டன் தன்னைத்தானே பாதித்துக் கொண்டார் என்று குற்றச்சாட்டு கட்டுரைகள் குற்றம் சாட்டின. இந்த விவகாரத்தை மறுக்க வெள்ளை மாளிகை ஊழியர்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர் நீதிக்கு தடையாக இருந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் பில்கிளிண்டனின் அரசியல் குற்றச்சாட்டு (Impeachment) ஒக்டோபர் 8, 1998 அன்று கொண்டுவரப்பட்டது. அமெரிக்காவின் 42 ஆவது ஜனாதிபதியான பில்கிளிண்டனுக்கு எதிராக "உயர் குற்றங்கள் மற்றும் தவறான செயல்களுக்காக" அரசியல் குற்றச்சாட்டு நடவடிக்கைகளைத் தொடங்க அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை வாக்களித்தது. அது பெரும்பான்மையுடன் நிறைவேறியது.

ஆனால் செனட் சபையில் கிளிண்டனின் விசாரணையின் முடிவு, ஜனாதிபதிப் பதவியில் இருந்து குறைந்த சூழ்நிலைகளில் மட்டுமே நீக்கப்பட வேண்டும் என்பதற்கான முன்னுதாரணத்தை வலுப்படுத்தியது. கிளிண்டன் மோசமாக நடந்து கொண்டார் என்று பல செனட்டர்கள் ஒப்புக்கொண்டாலும் இறுதியில் அவரது தவறான நடத்தை "உயர் குற்றங்கள் மற்றும் தவறான செயல்களின்" மட்டத்தில் இல்லை என்று அவர்கள் முடிவு செய்தனர். இதனால் செனட்டில் அவர் மீதான குற்றத்தை உறுதி செய்ய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

### ட்ரம்புக்கு எதிரான முதலாவது அரசியல் குற்றச்சாட்டு

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்பை 116 ஆவது ஐக்கிய அமெரிக்க காங்கிரஸின் பிரதிநிதிகள் சபை 2019 டிசெம்பர் 18 அன்று குற்றஞ்சாட்டியபோது டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான முதலாவது அரசியல் குற்றச்சாட்டு ஏற்பட்டது. 2020 ஆம்ஆண்டு அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் தனது மறுதேர்தல் முயற்சியில் உதவுவதற்காக அவர் வெளிநாட்டுத் தலையீட்டைக் கோரியதாக ஒருமுறையான விசாரணையில் தெரியவந்த தன் பின்னர் ட்ரம்பின் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. (தொடரும்...)

# மாணவியின் கோரிக்கையை நிறைவேற்றிய ஜனாதிபதி



(திருமலை)
திருகோணமலை, மதவாச்சி பாடசாலை மாணவியொருவர் பாடசாலை விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு உடனடியாகத் தீர்வு கிட்டியுள்ளது.

கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் கிவுலேகடவல வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சித்திட்டத்தின் போதே இந்த மாணவி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதி அந்தச் சந்தர்ப்பத்திலேயே விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் பணியை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார்.

மாணவியின்கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு இரண்டு மணி நேரத்திற்குள் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளது.(நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

## ஆத்ம திருப்தி தரும் 6 கால பூஜை வழிபாடு

*(தொடர்ச்சி)*

*ஒரு காலத்தில் இந்த 3 வகைகளிலும் 64 விதமான உபசாரப் பூஜைகளை நம் முன்னோர்கள் இறைவனுக்குச் செய்து வந்தனர்.*

*தற்போதைய இயந்திர உலகில் அதற்கெல்லாம் நேரம் இல்லை என்றாகி விட்டதோ என்னவோ ஷோடச உபசாரம் எனும் 16 வகை உபசார பூஜைகளையே நடத்துகிறார்கள்.*

**உ.நைமித்ய வழிபாடு**

*பரார்த்த வழிபாட்டின் இரண்டாவது வகை வழிபாடு நைமித்ய வழிபாடு என்றழைக்கப்படுகிறது.*

*வார விழா, பட்ச (15 நாட்கள்) விழா, மாத விழா, ஆண்டு விழா ஆகியவையே நைமித்ய வழிபாடாகும்.*

**3.காமிய வழிபாடு**

*காமிய வழிபாடு என்றால் வேண்டுதல் பேரில் செய்யப்படும் பொது வழிபாடாகும்.*

*இந்த வழிபாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகைப் பலன்கள் உள்ளது. அந்தப் பலனைப் பெற ஆலயங்களில் கேட்டால் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்.*

*நமது முன்னோர்கள் 6 கால பூஜையும் தடைப்படாமல் நடைபெற வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர். ஏதாவது காரணத்தால் ஒரு காலப் பூஜை தவறினாலும் அடுத்த காலப் பூஜையுடன் சேர்த்து நடத்தி விடுவார்கள்.*

*இரண்டு கால வழிபாடு நின்று விட்டால் சாந்தி ஹோமம் பரிகாரம் செய்து மீண்டும் வழிபாட்டைத் தொடங்குவார்கள்.*

*அது போல 3. காலப் பூஜை நின்று போனால் பஞ்ச கவ்ய அபிஷேக பரிகாரமும் ஒருநாள் வழிபாடு நின்று போனால் ஸ்நாபனம் மற்றும் சாந்தி ஹோமம் பரிகாரம் செய்ய வேண்டும் என்று ஆகம விதிகளில் கூறியுள்ளனர்.*

*5 நாள் வழிபாடு நின்று போனால் மூர்த்தி ஹோம பரிகாரம், 15 நாள் பூஜை நின்று போனால் திசா ஹோம பரிகாரம், ஒரு மாத வழிபாடு நின்று போனால் ஜல சம்ரோட்சண பரிகாரம் செய்ய வேண்டும்.*

*ஏனெனில் 6 காலப் பூஜைக்கு அவ்வளவு சக்தியும் மகத்துவமும் உள்ளது.*

*இந்த 6 காலப் பூஜைகளில் உங்களால் எப்போது கலந்து கொண்டு இறைவனை வழிபட முடியுமோ அப்போது வழிபடுங்கள்.*

*யார் ஒருவர் காலப் பூஜையைக் கணித்து இறைவழிபாடு செய்கிறாரோ அவரை எந்தத் தோஷமும் நெருங்காது. இறைவனுக்கும் அவருக்கும் ஒரு பாசப் பிணைப்பை இந்த 6 காலப் பூஜை வழிபாடு ஏற்படுத்திக் கொடுத்து விடும்.*

*குறிப்பாக பள்ளியறை பூஜைகளில் கலந்து கொள்பவர்களுக்கு இறைவன் மிக எளிதாக முக்திப் பாதையைக் காட்டுவார்.*

*அதுபோலவே பிரதோச கால வழிபாட்டுக்கும் முக்கியத்துவம் உள்ளது. பிரதோச தின வழிபாட்டைத் தவறவிடாமல் செய்பவர்களுக்கு ஈசனுடன் சேரும் அரிய பாக்கியம் மிக விரைவில் கிடைக்கும்.* *(முற்றும்)*

# செய்தித்துளிகள்

## நக்கிள்ஸ் மலைப் பகுதியில் அரியவகை மரங்கள் வெட்டப்படுகின்றன

### பிரதேசவாசிகள் குற்றச்சாட்டு

(ஹற்றன்)
உலக மரபுரிமையாகக் கருதப்படும் நக்கிள்ஸ் மலைத் தொடரில் பத்தனை பகுதியில் அரியவகையான மரங்கள் நிர்மாணப் பணிகளுக்காக வெட்டப்படுவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர். குறித்த மரங்கள் பல வருடங்கள் பழைமையானவை. நக்கிள்ஸ் மலைத் தொடர் பகுதியிலேயே இந்த வகையான மரங்கள் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். (நி-4)

## வாகன விபத்துக்களால் 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## ஷானி, சுகத் மனுக்கள் மீதான விசாரணை இம்மாதம்

(கொழும்பு)
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோர் பிணை கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த உத்தரவினை மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன கைது செய்யப்பட்ட வழக்கில், சாட்சியங்களை சோடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 280 | 280 | 400 |
| தக்காளி | 240 | 240 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 150 | 100 | 100 | 140 |
| கரட் | 160 | 220 | 180 | 240 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 180 | 160 | 140 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 250-350 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 130 | 160 |
| பாகற்காய் | 200 | 160 | 180 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 220 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 100 | 140 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 240 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 120 | 160 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 30 | 30 |
| ஈரப்பலா | 120 | 100 | -- | 100 |

# இழப்பீடுகளால் இழப்பீடுகளை ஈடு செய்ய முடியாது - மகேசன்

(யாழ்ப்பாணம்)

**இழப்பீட்டுத் தொகையால் வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் நன்மை பெறுகின்றனர். இழப்பீடுகளுக்கான நிவாரணம் முழுமையாக இழப்பை ஈடுசெய்வதாக அமையாது. இந்த இழப்பீட்டை வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 181 பயனாளிகளுக்கு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் 14.8மில்லியன் ரூபாய் இழப்பீட்டுத் தொகை நேற்று திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடு வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல தசாப்தங்களாக நாம்பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். ஈடு கொடுக்க முடியாத இழப்புக்களைக் கூட சந்தித்துள்ளோம். அவ்வாறு இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்கு அரசாங்கம் கொள்கை அடிப்படையில் இழப்பீடுகளை வழங்கி வருகிறது. உறவுகள் மற்றும் உடைமைகளை இழந்தவர்களுக்கு இந்த இழப்பீடு வழங்கப்படுகிறது.

சேதமடைந்த ஆலயங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கும் இந்த இழப்பீடுகள் வழங்கப்படுகிறது.

அந்தவகையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொதுமக்கள் சொத்து இழப்புக் கொடுப்பனவு ஒரு இலட்சம் ரூபாய், அரசாங்க ஊழியர்களுக்கான சொத்து இழப்புக் கொடுப்பனவு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய், வன்செயலில் இறந்தவர்களுக்கான கொடுப்பனவு ஒரு இலட்சம் ரூபாய், வன்செயலால் காயமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு ஐம்பதாயிரம் ரூபாய், முழுமையாக சேதமடைந்த ஆலயங்களுக்கு 10 இலட்சம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த ஆலயங்களுக்கு 5 இலட்சம் ரூபாவும் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

அதனைவிட பாதிக்கப்பட்ட மக்களுக்கு 4 சதவீத சலுகை வட்டி அடிப்படையில் 250,000 ரூபாய் சுயதொழில் கடன், புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான கடன், சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கான கடன் திட்டம் ஆகியனவும் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில் நேற்று 134 பேருக்கு சொத்து இழப்புக் கொடுப்பனவாக 9 மில்லியன் ரூபாவும், அரசாங்க ஊழியர் சொத்து இழப்புக் கொடுப்பனவாக 19 பயனாளிகளுக்கு 2.8 மில்லியன் ரூபாவும், வன்செயலால் இறந்த, காயமடைந்த 10 பேர், சேதமடைந்த 18 ஆலயங்களுக்கான கொடுப்பனவு 3 மில்லியன் ரூபாய் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன.

குறிப்பாக குறித்த இழப்பீட்டுத் தொகையால் வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் நன்மை பெறுகின்றனர். இழப்பீடுகளுக்கான நிவா ரணம் முழுமையாக இழப்பை ஈடு செய்வதாக அமையாது.

இந்த இழப்பீட்டை வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும். என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30-33)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கி வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)




கடந்த காலங்களில் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு இழப்பீட்டுத் தொகையை வழங்கி வைத்தார். முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 181 பயனாளிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் முழுமையாக பாதிப்படைந்த வழிபாட்டு தலங்கள், பகுதியாக சேதமடைந்த வழிபாட்டுத் தலங்கள், யுத்தத்தால் உயிர் இழப்பு மற்றும் சொத்து இழப்பைச் சந்தித்தவர்களுக்கான இழப்பீடுகளும் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான சொத்து இழப்புக் கொடுப்பனவு ஆகியனவே இவ்வாறு முதற்கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், கடற்றொழில் அமைச்சரின் பிரதிநிதி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (5,4,18,30,33)



வவுனியா பிரதேச கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் "வவுனியம்-04" கலை இலக்கிய பண்பாட்டு நூல் வெளியீட்டு விழா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன கலந்துகொண்டார். (படம் :-வசந்தரூபன்)

# உவர் நீர்த்தடுப்பணையை அமைத்துத் தருமாறு

## மாசேரி மக்கள் வேண்டுகோள்

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு முள்ளிப் பகுதியில் ஆரம்பித்து எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் முடிவடையும் கண்டல் காட்டு கரையோரத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ள உவர் நீர்த் தடுப்பணையானது 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

நாட்டிலே இடம்பெற்றிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக இத்தடுப்பணை அழிவடைந்ததோடு புனரமைப்பு மேற்கொள்ளப்படாமலும் இருந்தது.

பின்னர் இப்பகுதியில் குடியேறிய மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது உவர்நீர் வயல்நிலங்களில் புகுந்து நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலைமை காணப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக கிராமப் பொது அமைப்புக்கள் அரசாங்க அதிபரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த 2019 ஆம் ஆண்டு இத்தடுப் பணை சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டது.

மிகுதியான பத்து கிலோமீற்றர் அளவு பகுதி இன்னும் புனரமைக்கப்படாமல் உள்ளது.

எனவே கடந்த வருட நெற்பயிர்ச் செய்கைகளின் போதும் உவர்நீரானது நெல் வயல் நிலங்களில் புகுந்து செய் கையாளர் களுக்கு அழிவை ஏற்படுத்தியது. அதுமட்டு மன்றி பயிர்களும் எரிவடைந்தன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகினர்.

உவர்நீர்த்தடுப்பணையின் மிகுதிப் பகுதியினை புனரமைப்புச் செய்து தருமாறு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வருடத்திலாவது தடுப்பணையின் மிகுதிப் பகுதியினை புனரமைத்து விவசாயிகளின் பாதிப்பை நிவர்த்தி செய்யுமாறு மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-103)

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே! பவத்தை நீக்கிப் பணிவது வீரமே! தவத்தைச் செய்து சலிப்புறல் வீரமே! உவத்தல் காய்தல் ஒறுத்தல் வீரமே! – நற்சிந்தனை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## என்னால் ஆக வேண்டும் என்ற மனநிலை இருக்கும்வரை...

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய சிவில் அமைப்புக்களின் எண்ணிக்கையை அளவிடின் அஃது ஆச்சரியம் தரக்கூடியதாக இருக்கும்.

அந்தளவுக்கு கிழமைக்கு ஒன்று என்பதாக சிவில் அமைப்புகள் தோற்றம் பெறுகின்றன. ஒரு சிவில் அமைப்பை உருவாக்குவதற்கான எல்லைப்பாடுகள் எதுவும் அமுலில் இல்லாத நிலையில், புதிது புதிதாக தமிழ் சிவில் அமைப்புகள் தோற்றம் பெறுகின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு சிவில் அமைப்பை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவரே இன்னொரு அமைப்பையும் உருவாக்குகிறார் என்பதுதான்.

இதை நாம் கூறும்போது புதிதாக உருவாக்கப்படும் சிவில் அமைப்புக்களை எதிர்ப்பதாக யாரும் நினைத்துவிடாதீர்கள்.

மாறாக ஒரு சிறு பெயர் மாற்றத்துடன் புதிது புதிதாக சிவில் அமைப்புகளை உருவாக்குவதால், ஏலவே பலமாக இருந்த சிவில் அமைப்புகள் ஒதுங்கிக் கொள்கின்ற சூழமைவுகளும் ஏற்படும்.

எனவே சிவில் அமைப்புகளை உருவாக்கி அந்த அமைப்புகள் யார் பக்கம் நிற்கின்றன என்பதைத் தெரியாமல் உழல்வதை விடுத்து,

பலமான – உரமான – தமிழ் இனத்துக்காக ஓங்கிக் குரல் கொடுக்கக்கூடியதான – தமிழ் மக்களின் அங்கீகாரத்துக்கும் ஆதரவுக்கும் உட்பட்டதான சிவில் அமைப்புகளுடன் இணைந்து சென்று அந்த சிவில் அமைப்பை மேலும் பலப்படுத்தும்போது அது தமிழ் மக்களின் பலமாக அமையும்.

இதைவிடுத்து, அவர் சிவில் அமைப்பில் இருந்தால், நாம் மாத்திரம் என்ன? என்ற நினைப்போடு சிவில் அமைப்புகளை உருவாக்கினால், எந்த விடயத்திலும் உடன்பட முடியாத ஒரு இறுக்கமான சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதேநேரம் ஏலவே இயங்குநிலையில் உள்ள மக்கள் ஆதரவு பெற்ற சிவில் அமைப்புகள் புதியவர்களையும் ஆர்வமுள்ளவர்களையும் உள்வாங்குகின்ற ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

இல்லையேல் புதிய சிவில் அமைப்புகள் உருவாகிக் கொண்டே இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, தமிழ் அரசியல் கட்சிகளையும் சிவில் அமைப்புகளையும் இணைக்கின்ற முயற்சியில் யார் ஈடுபட்டாலும் அவர்களை ஆதரிக்கவும் அவர்களை ஊக்குவிக்கவும் மற்றையவர்கள் பக்குவமுடையவர்களாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து எந்த விடயமாயினும் என்னால் – என்னுடன் சேர்ந்த ஒரு சிலரால் மட்டுமே ஆக வேண்டும்.

நானே அதனைச் செய்தேன். செய்வித்தேன். என்னால் மட்டுமே இது ஆகக் கூடியது என்ற காட்டாப்புக்கு யார் ஆட்பட்டாலும் அந்தக் கருமம் பரிநாசமாகுமேயன்றி, அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்பட மாட்டாது.

ஆக, நல்லதை யார் செய்தாலும் அதை நாம் செய்தோம் என்று பொதுமக்கள் உரிமை கொண்டாட வேண்டும். அதுவே உண்மையான வெற்றியாகும்.

# சர்வதேசத்தை நாடினால் மட்டுமே தீர்வு எனும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்

### அநுரகுமார திஸாநாயக்க

**(கொழும்பு) உள்நாட்டு பிரச்சினைகளுக்கு சர்வதேசத்தை நாடினால் மாத்திரமே தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணும் நிலைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்களுக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையை எதிர்க்கும் தரப்பினர் நாம் அல்ல. எனினும் அவர்கள் இலங்கை தொடர்பில் தமது விருப்பத்திற்கேற்ப தீர்மானங்களை எடுக்க முடியாது என்பதில் நாம் உறுதிய ாகவுள்ளோம்.

அவ்வாறுள்ள போதிலும் சர்வதேசத்தை அல்லது ஜெனிவாவை நாடினால் மாத்திரமே எமக்கான தீர்வு கிடைக்கும் என்று மக்கள் எண்ணுகின்றனர்.

இதே போன்று வடக்கு-கிழக்கிலுள்ள மக்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் சர்வதேசத்தையே நாடவேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ளனர்.

இதே நிலைமை தொடருமாயின் இலங்கை எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற வேண்டும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராஜா வாழ்த்து

**(யாழ்ப்பாணம்) க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறவேண்டும் என யாழ். வலயக் கல்விப் பணியாளர் செல்வரட்ணம் சந்திரராஜா வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்ற உள்ள நீங்கள் அதிசித்தி பெறு பேறுகளைப் பெற்று உங்கள் இலட்சியத்துக்கமைவாக பொருத்தமான துறையில் உயர் கல்வியைத் தொடர்வீர்கள் எனவும் எதிர்காலக் கல்விக் கட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் வகையில் சிறந்த ஆளுமை உடையவர்களாகவும் உங்கள் தனிப்பட்ட வாழ்கையில் உங்கள் தாய்தந்தை ஆசிரியர்களின் பரஸ்பர உறவில் முக்கியமான ஒருவராகவும் திகழ்வீர்கள் எனவும் கல்வியின் இறுதி நோக்கம் ஒழுக்கமும் முழுமையான ஆளுமையும் கொண்ட சிறந்த எதிர் காலத் தலைமைகளை உருவாக்குவதே என்னும் அடிப்படையில் நீங்கள் மிக விரைவில் சிறந்த வழிகாட்டியாகவும் உடன்பாடான சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் ஒருவராகவும் செயற்படுவீர்கள் எனவும் இம்முறை பரீட்சையில் நீங்கள் சாதிக்கப் போவது சிக்கலான சூழ்நிலைகளின் மத்தியில் பெறப்போகின்ற சாதனை என்பதால் அனைவரும் கௌரவம் பெறக்கூடிய வகையில் நீங்கள் செயற்படுவீர்கள் எனவும் வெற்றி உங்களை அண்மிக்கின்ற இவ்வேளையில் நீங்கள் தொடர் சாதனைகளைப் படைப்பீர்கள்எனவும் வாழ்த்துகின்றேன் என்றுள்ளது. (ம-03)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உனது தேவை சுயநம்பிக்கை

❖ ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவதையும், வெறுப்பதையும் விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் பூஜிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

❖ மனதுக்கு பிடித்த வேலையை செய்ய மூடனாலும் முடியும், எந்த வேலையையும் தன் மனதுக்குப் பிடித்ததாகச் செய்பவன் அறிவாளி.

❖ பிறர் நலனுக்காகச் சிறிது பணி செய்தாலும் உனக்குள் உள்ள சக்தி விழித்துக் கொள்ளும். பிறருக்காக சிறிது சிந்தித்தாலும், உன் உள்ளத்தில் சிங்கத்தின் பலம் வந்து சேரும்.

❖ பணத்தால் எதுவும் ஆவதில்லை, பெயரால், புகழால், கல்வியால் எதுவும் ஆவதில்லை, அன்பால் அனைத்தும் நிறைவேறும்.

❖ எவரையும் "நீ கெட்டவன்" என்று சொல்லாதே, "நீ நல்லவன் தான், இன்னும் நல்லவனாக ஆகு" என்று தான் கூற வேண்டும்.

❖ உன்னை நீயே வெறுக்காமலிருப்பது தான் முதற் கடமையாகும். முன்னேற்றமடைய முதலில் சுயநம்பிக்கை அவசியம் தேவை.

# உலக நாடுகளின் கல்வியை அதிகமாக பாதித்த கொரோனா

## உலக வங்கியின் ஆய்வில் தகவல்

(டில்லி)

**கொரோனாவால் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், உலக நாடுகளின் கல்வி வளர்ச்சியை இந்த தொற்று அதிகமாக பாதித்துள்ளது.**

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் பேரிடராக உலக நாடுகளை புரட்டிப்போட்டுள்ளது, கொரோனா எனும் பெருந்தொற்று. இந்த ஆட்கொல்லி வைரசுக்கு எதிரான தடுப்பூசிகள் பயன்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், தொற்றில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதற்குள் இந்த பெருந்தொற்று உலகம் முழுவதும் ஏற்படுத்தி இருக்கும் தாக்கங்கள் மிகப்பெரிது. கொரோனாவுக்கு எதிராக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கால், வல்லரசு நாடுகளின் பொருளாதாரமே ஆட்டம் கண்டிருக்கின்றன. ஏழை நாடுகளை பெரும் வறுமைக்கே இந்த தொற்று இட்டுச் சென்றிருக்கிறது.

இந்த சூழலில் உலக நாடுகளில் கொரோனா ஏற்படுத்தி இருக்கும் பாதிப்புகள் குறித்து தொடர் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இதில் கல்வியில் ஏற்பட்டிருக்கும் தாக்கம் குறித்து உலக வங்கியும், யுனெஸ்கோ நிறுவனமும் இணைந்து ஆய்வு நடத்தின.

இதில் அனைத்து மண்டலங்களில் இருந்தும் ஏழை, கீழ்-நடுத்தர, உயர்-நடுத்தர, அதிக வருவாய் கொண்ட நாடுகள் என 29 நாடுகளில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.


இதில் அதிர்ச்சிகரமான முடிவுகள் வெளியாகி உள்ளன. அந்தவகையில் 65 சதவீத குறைந்த மற்றும் கீழ்-நடுத்தர வருவாய் கொண்ட நாடுகள் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்திருக்கின்றன.

கொரோனா நெருக்கடியை எதிர்கொண்டு தொற்று நோயைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளுக்கு இணங்க பாடசாலைகளைத் திறப்பதற்கும் பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இழப்புகளை ஈடுசெய்ய கூடுதல் செலவு தேவைப்படுகிறது.

ஆனால் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நாடுகளில் 50 சதவீத நாடுகள் தங்கள் பட்ஜெட் திட்டங்களைக் குறைத்திருப்பது தெரிய வந்திருக்கிறது.

ரஷ்யா, இந்தியா, ஆர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் 10 சதவீதத்திற்கும் குறைவான கல்விப் பங்குகள் உள்ளன எனவும், எனவே மத்திய அரசு ஒதுக்கிய வரவு- செலவுத் திட்டத்தைத் தவிர மற்ற முக்கிய நிதி ஆதாரங்களையும் கொண்டிருக்கக் கூடும் எனவும் உலக வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி-4)

## 2000 ஆண்டுகள் பழைமையான தேர் இத்தாலியில் கண்டுபிடிப்பு



(ரோம்)


இத்தாலியின் பாம்பேய் நகரில் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய தேர் ஒன்றை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தாலியின் தெற்கு பகுதியில் உள்ள தொன்மை வாய்ந்த நகரம் பாம்பேய். கி.பி.79 இல் வெசுவியஸ் மலையில் ஓர் எரிமலை சீற்றம் ஏற்பட்டது.

அந்த எரிமலை வெடிப்பு, பாம்பேய் நகரத்தை ஓர் அடர்த்தியான சாம்பல் படிவத்தால் மூடிவிட்டது. அது அங்கு வாழ்ந்த மனிதர்களின் எச்சங்கள் மற்றும் கட்டடங்களை பாதுகாத்து வருகிறது.

இதனால் இந்த நகரம் இன்று அகழ்வாய்வாளர்களின் சொர்க்கமாக இருக்கிறது. இந்த நிலையில் பாம்பேய் நகரில் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய தேர் ஒன்றை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். (நி-4)

## ராமர் கோவில் நிர்மாணிப்புப்பணி; எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாக கிடைத்த நிதி



(டில்லி)

அயோத்தியில் ராமர் கோவில் நிர்மாணிப்பு பணிகளுக்காக 2 ஆயிரத்து 100 கோடிக்கும் அதிகமாக நிதி கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமருக்கு பிரமாண்ட கோவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.


அதற்கு ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவாகும் என கோவில் கட்டுவதற்கான அறக்கட்டளை கணக்கிட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி 15 ஆம் திகதி முதல் பொதுமக்களிடம் நன்கொடை திரட்டும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

அதில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் ஆயிரம் கோடி ரூபாய் அதிகமாக கிடைத்துள்ளது.

ராமர் கோயில் வளாக மொத்த கட்டுமானத்திற்கு 1100 கோடி ரூபாயும், அதில் கோவிலுக்கு மட்டும் 300 கோடி ரூபாய் முதல் 400 கோடி ரூபாய் வரையும் செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார் மோடி




(டில்லி)

டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திங்கட்கிழமை கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்.

அத்துடன் தகுதியான அனைவரும் கொரோனா தடுப்பூசி எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும் என பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைவரும் ஒன்றிணைந்து கொரோனா இல்லாத நாடாக இந்தியாவை மாற்றுவோம் எனவும் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். (நி-4)

## அடுத்த தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன்- ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் போட்டியிடலாம் என முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் 2ஆவது முறையாக ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் ஜோ பிடனிடம் தோல்வியை தழுவினார்.

தோல்விக்குப் பிறகு முதல் முறையாக பொது மேடையில் பேசிய ட்ரம்ப், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் நான் போட்டியிடலாம் என்று தெரிவித்தார். (நி-4)

## கொரோனா...

உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 476 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## குளவி தாக்கி...

சேர்ந்த 51 வயதுடைய கந்தசாமி சத்தியநாதன் என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

## மகன் தாக்கி...

சம்பவம் புத்தூர் இராசபாதை வீதியில், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 64 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சீனிவாசன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மகனுக்கும் தந்தைக்கும் இடையில் சிறு தர்க்கம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது மகன் இரும்பு கம்பியால் தந்தையை தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதையடுத்து தலைமறைவாக இருந்த மகன் ஊர் மக்களால் பிடித்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மனநோயினால் பீடிக்கப்பட்டு இருந்ததாகவும் தினந்தோறும் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் சண்டைகள் இடம்பெற்று வந்ததாகவும் இளைய மகன் தெரிவித்துள்ளார். (ம-3,33,60)

## சிறீதரனிடம்...

கவனயீர்ப்பு பேரணியில் கலந்து கொண்டமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (ம-3,100)

## நல்லூரில்...

சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

ஜெனிவாவில் தற்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத் தொடர் இடம்பெற்றுவரும் நிலையில் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி மேற்படி உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி கூட்டத் தொடர் நிறைவேறும்வரை தமது போராட்டம் தொடரும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நல்லூரில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்திற்கு அரசியல் பிரமுகர்கள், சிவில் - சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தமிழ் உறவுகளும் இணைந்து கொண்டு வலுச் சேர்க்க வேண்டும் என மேற்படி போராட்டத்தில் பங்கெடுத்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்தனர். (ம-3,18,33)

## பருத்தித்துறை...

பீட ஆய்வுகூடத்தில் நேற்று 244 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 6 பேருக்கு தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்ட பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் மூவருக்கு நேற்றைய பரிசோதனையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பியவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 241 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 10 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாந்தை மேற்கில் 4 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்ற 24 பேருக்கு தொற்று உள்ளமை கடந்த வாரம் கண்டறியப்பட்ட நிலையில் இவர்கள் நால்வரும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள பண்ணாகத்தில் ஒரே குடும்பத்தில் நால்வருக்கும் அச்சுவேலி வியாபாரியின் குடும்பத்தில் ஏற்பட்ட கொரோனா தொற்றால் மேலும் ஒருவருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## தனியார்...

நேற்றையதினம் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாநகர முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாக திறக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்த நிலையில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் நேற்றையதினம் சேவையில் ஈடுபடாது புறக்கணித்திருந்தன.

இந்த நிலையில் நேற்று மதியம் மாநகர முதல்வர் அலுவலகத்தில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் உடன் இடம்பெற்ற சந்திப்பின்போது இலங்கை போக்குவரத்து சபையினர் நெடுந்தூர பேருந்து நிலையத்தில் சேவையில் ஈடுபட சம்மதிக்காததன் காரணமாக தனியார் போக்குவரத்து சங்கத்தினர் ஆகிய நாங்களும் குறித்த பேருந்து நிலையத்தில் சேவை புரிவதை இடைநிறுத்தி நாங்கள் வழமையாக சேவையில் ஈடுபடும் யாழ்.நகர மத்திய பேருந்து நிலையத்துக்கு பின்புறமாக எமது பேருந்துகள் வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் என தெரிவித்தார். எனவே பொதுமக்கள் வழமையான இடத்தில் எமது சேவையினை பயன்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவித்தார். (ம-3,18,33)

## படிக்கட்டில்...

வேலைகளுக்காக வந்திருந்த குறித்த குடும்பஸ்தர், நெல் பதப்படுத்தும் தொட்டி பொருத்து வேலை முடித்து கீழே இறங்குவதற்காக படியில் கால் வைத்தபோதே குறித்த நபர் தவறி விழுந்துள்ளார்.

அருகில் இருந்தவர்கள் அவரை உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் நான்கு பிள்ளைகளின் தந்தை எனவும் இவர் மட்டக்களப்பைச் சேர்ந்த இராமையா விஜயரத்தினம் (வயது-54) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,316)

## வைத்...

புகுந்த இனந் தெரியாத நபர்கள் தாக்கியதில் வைத்தியர்களான கணவனும் மனைவியும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. (ம-3,250,299)

## ஐ.நா முன்றலில்...

46ஆவது மனித உரிமைகள் ஆணைக்குழு வின் கூட்டத்தொடர் ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கும் நிலையில் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

பல்லாயிரக் கணக்கான தமிழ் உணர்வாளர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (ம-3)

## ஜெனிவா வரை...

பட அனைத்து குற்றங்கள் தொடர்பில் விசாரணை ஒன்றிற்காக பாரப்படுத்துவதற்கான முனைப்புக்களை எடுக்க வேண்டும். கடந்த 15.01.2021தமிழ்தேசியக்கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் சமூக அமையம் உள்ளடங்கலான பொது அமைப்புக்கள் இணைந்து விடுத்த கோரிக்கை விடுத்தன.

ஆனால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையானது தொடர்ந்து இலங்கை விவகாரத்தை ஜெனிவாவில் வைத்திருந்து நேரத்தை வீணடிக்கும் நோக்கம் கொண்டதென நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் உத்தேச வரைபில் முன்வைக்கப்பட்டுள்ள யுத்த மீறல்கள் சம்பந்தமான ஆதாரங்களை சேர்ப்பது தொடர்பிலான பந்தியானது (உத்தேச வரைபு பந்தி 6) இவ்விடயம் தொடர்பில் தனித்துவமான பொறிமுறையை உருவாக்கத் தவறுகிறது என்றும் சிரியா மற்றும் மியான்மார் தொடர்பில் உருவாக்கப்பட்ட பொறிமுறை போன்றதொரு பொறிமுறை பிரேரணையில் உள்ளடக்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1669 திகதி 2021.03.01
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 23 28 79 86
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0778
L 25 18 65 67 69

மஹஜன சம்பத
திகதி 2021/03/01
சீட்டிழுப்பு இலக்கம் 4413
R 8 6 7 6 9 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 01.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2708
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 11 35 36 48
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.03.01
சீட்டிழுப்பு இலக்கம் -450
F 04 18 24 42
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1209
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 01.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 113,013,870
வெற்றி இலக்கங்கள் 17 21 49 64 ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3539
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 01.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,092,173
வெற்றி இலக்கங்கள் 04 11 63 70 ஆங்கில எழுத்து I
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,228,331/=
திகதி: 01.03.2021
வெற்றி வாரம்: 3090
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 33 49 57 62 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,440,060

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1383 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 01/03/2021 தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 06 46 59 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 71,648,560/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1737
சீட்டிழுப்பு திகதி 01.03.2021
வெற்றி இலக்கங்கள் 21 51 67 70 ஆங்கில எழுத்து B
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 22,377,132
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# அகிம்சை பேரணி தொடர்பில்

# எம். கே. சிவாஜிலிங்கத்திடம் பொலிஸார் வாக்குமூலம்

(குப்பிழான்)

தமிழ்த்தேசியக் கட்சியின் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்திடம் ஒட்டுசுட்டான் பொலிஸார் நேற்றுத் திங்கட்கிழமை வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்

வல்வெட்டித்துறையிலுள்ள சிவாஜிலிங்கம் வீட்டிற்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவித்து வாக்குமூலத்தை பெற்றுக் கொண்டனர் (ம-03,-18)


## பதவி வெற்றிடம்

நாடளாவிய ரீதியில் சிறந்து விளங்கும் Holdings Lanka (pvt) Ltd இன் புதிய கிளைகளான யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி கிளைகளுக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு புதியவர்கள் இணைக்கப்படவுள்ளனர். (5985)

தகைமைகள் : O/L, A/L படித்திருத்தல், வயதெல்லை 18 - 30. அனுபவம் அவசியமற்றது. உணவு, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**077 766 4474, 076 808 2241**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5977)

## 21 பரப்புக் காணி விற்பனைக்கு

தொண்டைமானாற்றில் இருந்து வல்வெட்டித்துறை செல்லும் கடற்கரை வீதியில் 21 பரப்புக் காணி (வீதியில் இருந்து இரண்டாவது காணி) விற்பனைக்கு உண்டு. (C-1566)

**077 123 5942**

## ikman.lk

SRI LANKA'S LARGEST MARKET PLACE

இலத்திரனியல் பொருட்கள், சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் விற்பனை செய்யும் கம்பனிகள் மற்றும் அவர்கள் சார்பான பிரதிநிதிகளுடனான சந்திப்பு.

இடம் : லான் லோட் பலஸ், இல. 15, கச்சேரி - நல்லூர் வீதி, (YMCA அருகாமையில்)

திகதி : 03.03.2021

நேரம் : மாலை 5.00 மணி

மட்டுப்படுத்தப்பட்ட இருக்கைகள்

பதிவுகளுக்கு S.S LAXSHAN

**070 435 0189** (5979)

Ikman.lk இல் உங்கள் சேவைகள் தொடர்பாகவும் தொடர்பு கொள்ளலாம்.

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய், நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

(2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்)

பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்.

(தரகர் தேவையில்லை.) (5976)

தொடர்பு

**077 596 3845, 076 640 0974**

## உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை

DHL உள்நாடு யாழ். - கொழு. / கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்

வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது.)

Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5980)



076 283 2397
076 485 4092

## யாழ். மாவட்ட மாட்டுவண்டி சவாரிச் சங்க பொதுக்கூட்டமும் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவும்

காலம் : 06.03.2021 சனிக்கிழமை

நேரம் : மாலை 2.30 மணி

இடம் : புன்னாலைக்கட்டுவன் வடக்கு அம்மன் கோவில் முன்றலில் (5975)

சவாரிச் சங்க உறுப்பினர்கள், காளைச் சொந்தக்காரர்கள், சவாரிப் பிரியர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட மாட்டுவண்டி சவாரிச் சங்கம்.

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1568)

**077 436 6704, 077 179 1963**

## யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் ஆறுகால் மடம் மெயின் றோட்டுடன் (22) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

(யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரத்தில்)

இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (5616)

குரு : 077 288 0152
076 857 7043
077 468 3354

## காணி தேவை

யாழ். மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட இடத்தில் 20 - 30 வரையான பரப்பளவு காணி தேவை. (5616)

**076 221 2037**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### செல்வராசா யோகீஸ்வரி

((லிகிதர் - கமநல சேவை நிலையம், கைதடி.))

திதி : சதுர்த்தசி

இறந்தும் இறவாமல் எம் இதயங்களில்
கொலுவிருக்கும் அன்பு அன்னை போல
அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
அரவணைத்து
புன்னகையினால் துன்பம் மறைத்து
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
ஆற முடியவில்லையம்மா....
ஆறுதல் கூற யாருமின்றி புவிதனில்
பரிதவித்து நாம் நிற்கின்றோம்.
உங்கள் அன்பு வழியில் இப்புவியில்
வாழ்வாங்கு வாழ உங்கள் பாதம்
பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

பிறப்பு 28.12.1953

இறப்பு 23.02.2009

(5978)

கைதடி.

தவிப்புடன்
அன்புக் கணவர், குடும்பத்தினர்.

## தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது நிறுவனத்திற்கு கணக்கியல் பயிலுனர் - CIMA, Chartered, HNDA மாணவர்கள் மற்றும் A/L Commerce பிரிவில் சித்தியெய்தியவர்கள். காரியாலய உதவியாளர் : 30 - 50 வயதிற்கு இடைப்பட்டவர்கள் (காரியாலயத்தில் இருந்து 2 Km இற்குள் வசிக்கும் ஆண்கள்.) (5984)

**075 099 9243**

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1546)

0768226240 DHL

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1548)

070 3305500
077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை | பளை | மல்லாவி |
| ஆவரங்கால் | கிளிநொச்சி | மன்னார் |
| நெல்லியடி | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| சங்கத்தானை | முல்லை | கொழும்பு |

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## வேலை வாய்ப்பு

நெல்லியடியில் தனியார் நிறுவனத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை

1. பியூட்டி பார்லர் பணியாளர்
2. பொதுப் பணியாளர்
3. பணி உதவியாளர்

மேலதிக விபரங்களை நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்

உங்களின் விபரங்களை வழங்கி, வருகை தரவேண்டிய நாள் நேரம் தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ளுங்கள் (C-1567)

நிர்வாகி : 077 98 87 538

## DMI

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புவியியல் N.BABU

"விடுமுறைக்கால அதிக நேர வகுப்புக்கள்" (C-1562)

| | A/L - 2022 | A/L - 2021 |
|---|---|---|
| திங்கள் | 8.00 a.m - 10.00 a.m | 10.00 a.m - 2.00 p.m |
| செவ்வாய் | —— | 12.00 p.m - 2.00 p.m |
| புதன் | 8.00 a.m - 10.00 a.m | 10.00 a.m - 2.00 p.m |
| வியாழன் | —— | 12.00 a.m - 2.00 p.m |
| வெள்ளி | 8.00 a.m - 10.00 a.m | 10.00 a.m - 2.00 p.m |

புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

☎-077 936 5087


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.